LC
N21
147587

20 OCT 1921

# ஆஸவாரிஷ்டகல்பம்

என்னும்

# மதுவர்க்கம்.

செப்பனிடுபவர் பெயர்
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்
1992
செப்பனிட்டு முடித்த நாள்
பிப்ரவரி 1993
பார்க்கும் உ. பா. எ. கையொப்பம்.
மேற்பார்வை உதவியாளர் கையொப்பம்.
No-14
LC
14
142587

# ஆஸவாரிஷ்டகல்பம்

என்னும்

## மதுவர்க்கம்

இஃது

சென்னைத் திருமயிலை

ஆயுர்வேத சித்தாசிரமம்

**வைத்தியபூபதி - S. கிருஷ்ணராயர்**

அவர்களால் தீட்டப்பெற்று

சென்னை

ஈஸ்ட்டான் பார்மக்யூடிகல் ஒர்க்ஸ்

**மருத்துவசிரோமணி - க. ச. முருகேச முதலியார்**

அவர்கள் பொருளுதவியால்

சென்னை:

கணேச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1921.

All Rights Reserved

Price As 12-

3
26 OCT 1921
MADRAS

# முகவுரை.

சிறப்புற்றோங்கும் இப்பாரதகண்டத்தினுள் நீர்வளம், நிலவளமுதலியவைகளில் ஒப்புயர்விலாது விளங்காநின்ற தென்னாட்டின்கண் தோன்றிய மஹத்துவம் பொருந்திய அகஸ்தியாதி பதினென் சித்தர்குழாத்தார் ஜீவகாருண்யமேலீட்டால் அருளிச்செய்த வைத்திய சாஸ்திரங்கள் பல. அவற்றுள் சிதைந்தனபோக எஞ்சிநின்றவற்றுள் சிலமுன்னரே அச்சுவாகனமேறப்பெற்று வெளிப்புலாவுகின்றன. இவைகளை யநுசரித்தும், மறைந்துகிடப்பனவற்றில் சிலவற்றையநுசரித்தும் பின்னோர்கள் இயற்றிய நூல்கள் எண்ணிறந்தன. ஆயினும் இவற்றுள் வடமொழிச் சாஸ்திரமாக வெளியிடப்பட்ட முறைகளில் சிற்சில ஆங்காங்கு காணப்படுகின்றனவேயன்றி வடநாட்டுக் கவிராஜர்கள் தற்காலம் செய்யாநின்றுவரும் "ஆஸவாரிஷ்டம்" என்னும் மருந்துகள் சிறிதேனும் காணப்படவில்லை. இம்முறைகள் வடமொழி அறிவுள்ளோர்க்கேயன்றித் தென்மொழித் தேர்ச்சியுள்ளார்க்குப் பயன்படாதிருப்பதை நோக்கியும், இவைகளைத் தென்னாட்டிலுள்ள வைத்தியர்களும் ஏனையோரும் எளிதில் உணர்ந்து இவைகளின் பெரும்பயனைப் பெறவேண்டுமென்ற கருத்துடனும், பண்டிதர்களின் உதவியைக் கொண்டு இதுகாறும் திரட்டியுள்ள அரும்பெரு முறைகளை "ஆஸவாரிஷ்டகல்பம்" என்னும் பெயரினால் வெளிப்படுத்தலானேன்.

இந்நூலியற்றுவதில் துணைபுரிந்த வைத்திய விசாரதா, ப்ரஹ்மஸ்ரீ K. G. நடேசசாஸ்திரியார் அவர்களுக்கும், இதனை

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008.
147587

அச்சிடுவதில் பலவிதத்திலும் சகாயம்செய்த மருத்துவசிரோமணி, ம-ா-ா-ஸ்ரீ க. ச. முருகேச முதலியார் அவர்களுக்கும் எனது நன்றியை செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இதில் குற்றங்குறைகள் நுழைந்துளதேல், அவைகளைக் கண்ணுறும் நண்பர்கள் எனக்குத் தெரிவிப்பின் அவைகளை மிக்கவந்தனத்துடன் ஏற்று, இதன் இரண்டாம்பதிப்பிற் சேர்த்து வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கின்றேன்.

முதனூலிற்கூறியபடியே, மருவர்க்கங்களின் பெயர்களையும், யோகங்களிலமைந்துள்ள பொருட்பதங்களையும், இந்நூலில் உபயோகித்துள்ளேன். இவ்வுபயோகம் பண்டிதர்கட்கெளிதெனினும், மற்றையோர்கட்கும் மாணவர்கட்கும் சிறிதுகடினமாகவே இருக்கும். இதனை நீக்கும்பொருட்டு அரும்பதவிளக்க அட்டவணையொன்றும், இன்னின்ன நோய்கட்கு இன்னின்ன முறைகள் பலன்தருமென எளிதிலறிய ஓர்குறிப்பும் சேர்த்துள்ளேன்.

இந்நூல் சிறிதேயாயினும் இதற்கெடுத்துக்கொண்ட முயற்சி பெரிதாயிற்று. இதனை ஆதரிப்பதுடன் நம் தென்னாட்டு வைத்திய நண்பர்களும், கனதனவான்களும், மற்றுமுள்ள அபிமானிகளும் எனக்குத்தக்க ஊக்கத்தைக்கொடுத்து உதவிபுரியவுந் துணிவார்களாகில், என்னால் எழுதப்பெற்றுள்ள அடியிற்கண்ட நூல்களும் வெகு துரிதத்தில் வெளிப்படும். இம்முயற்சி நன்கு முடிய எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவாராக.

### 1. நிதான பஞ்சலக்ஷணி.

இது

மானிடர்களுக்கு உண்டாகும் பிணிகள் ஒவ்வொன்றினுக்கும் (1) காரணம் (2) முற்குறி (3) இயற்கைக்குறி (4) தேகத்தில் வியாபிக்கும் வகை (5) தணியும்வகை ஆகிய ஐவகை இலக்கணங்களையும் கூறும்.



### 2. சாஸ்திர சித்தயோகம்.

இது

"நிதான பஞ்சலக்ஷணி"யில் கூறியுள்ள ரோகங்கள் யாவற்றுக்கும், உயர்தரத் தென்னாட்டுச் சித்தர்பரம்பரைச் சிகிச்சை முறைகளை விவரிக்கும்.

### 3. கவிராஜ சேகரம்.

இது

"நிதான பஞ்சலக்ஷணி"யில் கண்ட வியாதிகட்கு, வடமொழிச் சம்பிரதாயத்தை அனுசரித்த கைவல்யமான யோகங்களை விளக்கும்.

4. பதார்த்தபஞ்சதுணமஞ்சரியும், நிகண்டும்.
5. பத்தியாபத்தியவிவரணம்
6. பேஷஜகல்பம்
7. சுத்திக்கிரமாலங்காரம்
8. தினக்கிரமாலங்காரம்
9. ஹரீதகிப்பிரபாவம்

சென்னை திருமயிலை.
25-8-1921.

S. கிருஷ்ணராயர், வைத்தியபூபதி,
ஆயுர்வேத சித்தாசிரமம்.

# ஆஸவாரிஷ்ட அட்டவணை.


| அரிஷ்டம். | பக்கம் |
|---|---|
| 1. அசோகாரிஷ்டம் | 1 |
| 2. அபயாரிஷ்டம் | ,, |
| 3. அம்ருதாரிஷ்டம் | 2 |
| 4. அயஸ்க்ருதி | ,, |
| 5. அர்ஜுனாரிஷ்டம் | 3 |
| 6. அஷ்டதசாரிஷ்டம் | ,, |
| 7. அச்வகந்தாரிஷ்டம் | ,, |
| 8. அஸ்ரஹாரிஷ்டம் | 4 |
| 9. ஏலாத்யாரிஷ்டம் | ,, |
| 10. கற்பூராரிஷ்டம் | 5 |
| 11. கனகாரிஷ்டம் | ,, |
| 12. கிராதாரிஷ்டம் | 6 |
| 13. குடஜாரிஷ்டம் | ,, |
| 14. தக்ராரிஷ்டம் | 7 |
| 15. தசமூலாரிஷ்டம் | ,, |
| 16 தந்த்யாரிஷ்டம் | ,, |
| 17. தாத்ர்யாரிஷ்டம் | 8 |
| 18. தான்யகாத்யரிஷ்டம் | ,, |
| 19 திராக்ஷாரிஷ்டம் | ,, |
| 20. துராலபாரிஷ்டம் | 9 |
| 21. பப்பூலாரிஷ்டம் | ,, |
| 22. பலாரிஷ்டம் | 10 |
| 23. பற்படகாத்யரிஷ்டம் | ,, |
| 24. பார்த்தாரிஷ்டம் | 11 |
| 25. மண்டூராரிஷ்டம் | ,, |
| 26. மதூகாரிஷ்டம் | ,, |
| 27. முஸ்தாரிஷ்டம் | ,, |
| 28. ம்ருதசஞ்சீவினீஸுரா | 12 |
| 29. ரஸாயனாரிஷ்டம் | ,, |
| 30. லக்ஷ்மணாரிஷ்டம் | 13 |
| 31. வாஸாரிஷ்டம் | ,, |
| 32. விடங்காரிஷ்டம் | ,, |
| 33. ஸாரஸ்வதாரிஷ்டம் | 14 |
| 34. ஸிரீஷாரிஷ்டம் | ,, |
| 35. ஜீரகாத்யாரிஷ்டம் | 15 |
| **ஆஸவம்.** | |
| 1. அரவிந்தாஸவம் | 16 |
| 2. அஹிபேனாஸவம் | 17 |
| 3. ஆமபாசாங்குசம் | 16 |
| 4. உசீராஸவம் | 17 |
| 5. உதிராஸவம் | 18 |
| 6. கர்ஜூராஸவம் | 19 |
| 7. குக்குல்வாஸவம் | ,, |
| 8. குடஜாஸவம் | ,, |
| 9. குமார்யாஸவம் | 20 |
| 10. சந்தனாஸவம் | 21 |
| 11. சிசிரபானகம் | ,, |
| 12. சவிகாஸவம் | ,, |
| 13. தேவதார்வாஸவம் | 22 |
| 14. த்ராயமாணாஸவம் | ,, |
| 15. த்ரிபலாஸவம் | 23 |
| 16. நாரிகேளாஸவம் | ,, |
| 17. பஞ்சமூத்ராஸவம் | ,, |
| 18. பத்ராங்காஸவம் | 24 |
| 19 பிப்பல்யாஸவம் | ,, |
| 20. பீஜகாஸவம் | 25 |
| 21. புனர்நவாஸவம் | ,, |
| 22. புஷ்கரமூலாஸவம் | 26 |
| 23. ப்ருங்கராஜாஸவம் | ,, |
| 24. ப்ருஹத்சக்ரஸந்தானம் | 27 |
| 25. மத்வாஸவம் | ,, |
| 26. மஸ்தீவாஸவம் | ,, |
| 27. மாக்ஷிகாஸவம் | 28 |
| 28. ம்ருகமதாஸவம் | ,, |
| 29. யோகராஜாஸவம் | 28 |
| 30. ரோஹிதகாஸவம் | 29 |
| 31. லகுசக்ரஸந்தானம் | ,, |
| 32. லவங்காஸவம் | ,, |
| 33. லோத்ராஸவம் (மத்வரிஷ்டம்) | 30 |
| 34. லோஹாஸவம் | ,, |
| 35. வஜ்ரீகாஞ்ஜிகம் | ,, |
| 36. ஸர்க்கராஸவம் | 31 |
| 37. ஸாரிபாஸவம் | ,, |
| 38. ஸ்ரீகண்டாஸவம் | 32 |
| 39. ஹரீதக்யாஸவம் | ,, |

# பிணிகளுக்கேற்ற ஆஸவாரிஷ்டங்களின் குறிப்பு.

ஜ்வரம்:—அமிர்தாரிஷ்டம், அச்வகந்தாரிஷ்டம், இராதாரிஷ்டம், தான்யகாத்யரிஷ்டம், பலாரிஷ்டம், பர்படகாத்யரிஷ்டம்.

ஸந்நிபாதஜ்வரம்:—குபீஜகாஸவம், ம்ருகமதாஸவம்.

க்ரஹணி, அதிசாரம், சீதபேதி, ரக்தபேதி:—குடஜாரிஷ்டம், தக்ராரிஷ்டம், திராக்ஷாரிஷ்டம், பப்பூலாரிஷ்டம், முஸ்தாரிஷ்டம், ஜீரகாத்யரிஷ்டம், அஹிபேனாஸவம், மஸ்தவாஸவம், மதுகாஸவம், லகுசுக்ராஸந்தானம், லவங்காஸவம்.

விஷூசி:—கற்பூராரிஷ்டம், முஸ்தாரிஷ்டம், அஹிபேனாஸவம், ம்ருகமதாஸவம்.

மூலம்:—அபயாரிஷ்டம், கனகாரிஷ்டம், ஸர்க்கராஸவம், தந்த்யரிஷ்டம், ஜூஷபாரிஷ்டம், தேவதார்வாஸவம், ரோஹிதகாஸவம், ஹரீதக்யாஸவம்.

வீக்கம், பாண்டு, சோகை, காமாலை, ரக்தக்ஷீணம், பலஹீனம்:—அயஸ்க்ருதி, அஷ்டாதசாரிஷ்டம், மண்டூராரிஷ்டம், ஸோபஹரிஷ்டம், தந்த்யரிஷ்டம், த்ரிபலாஸவம், புனர்நவாஸவம், ப்ருங்கராஜாஸவம், ம்ருதசஞ்ஜீவினீஸுரா, லோஹாஸவம்.

இருமல், காசம், சுவாசம், க்ஷயம், உரக்ஷதம்:—அஸ்ரஹாரிஷ்டம், ஏலாத்யரிஷ்டம், கனகாரிஷ்டம், திராக்ஷாரிஷ்டம், பப்பூலாரிஷ்டம், வாஸாரிஷ்டம், கற்பூராஸவம், த்ராயமாணாஸவம், பிப்பல்யாஸவம், புஷ்கரமூலாஸவம், ப்ருங்கராஜாஸவம், மாசிகாஸவம், ம்ருகமதாஸவம்.

ரக்தபித்த ரோகம்:—அசோகாரிஷ்டம், கனகாரிஷ்டம், திராக்ஷாரிஷ்டம், மதுகாரிஷ்டம், வாஸாரிஷ்டம், உசீராஸவம், யோகராஜாஸவம்.



ஹ்ருத்ரோகம், புப்புஸரோகம்:—அர்ஜுனாரிஷ்டம், பார்த்தாரிஷ்டம், கனகாரிஷ்டம், தந்த்யரிஷ்டம், திராக்ஷாரிஷ்டம், ம்ருகமதாஸவம், ரோஹிதகாஸவம்.

உதரரோகம், யக்ருத்ரோகம், ப்லீஹம்:—அபயாரிஷ்டம், ஆமலகாத்ருதிகம், தாத்ர்யரிஷ்டம், பர்படகாத்யரிஷ்டம், கனகாரிஷ்டம், குமார்யாஸவம், பஞ்சமூலாஸவம், புனர்நவாஸவம், மஸ்தவாஸவம், ரோஹிதகாஸவம், ஹரீதக்யாஸவம்.

வாதரோகம், ஆமவாதம்:—அபயாரிஷ்டம், அச்வகந்தாரிஷ்டம், தசமூலாரிஷ்டம், தந்த்யரிஷ்டம், பலாரிஷ்டம், குக்குல்வாஸவம், த்ராயமாணாஸவம், தேவதார்வாஸவம், புனர்நவாஸவம், ஹரீதக்யாஸவம்.

அஜீர்ணம், சூலை, குன்மம், மந்தாக்னி, வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல்:—ஆமலகாத்ருதிகம், ஜீரகாத்யரிஷ்டம், கனகாரிஷ்டம், குமார்யாஸவம், செவிகாஸவம், தக்ராரிஷ்டம், ப்ருஹத்சுக்ராஸந்தானம், லகுசுக்ராஸந்தானம், வஜ்ரகாஞ்ஜிகம்.

பித்தம், வாந்தி, விக்கல், மயக்கம்:—தாத்ர்யரிஷ்டம், மித்ரபானகம்.

உஷ்ணம், தாகம், தாபம்:—தாத்ர்யரிஷ்டம், உசீராஸவம், சந்தனாஸவம், சிசிரபானகம்.

வைசூரி, பிடகம், விஸ்போடகம்:—ஏலாத்யரிஷ்டம்.

வெட்டை, ப்ரதரம், ப்ரமேஹம், கிருச்ரம்:—அசோகாரிஷ்டம், உசீராஸவம், குக்குல்வாஸவம், சந்தனாஸவம், தேவதார்வாஸவம், பத்ராங்காஸவம், மதுகாஸவம், லோத்ராஸவம்.

அசுத்தரக்தம் மேகம் குஷ்டம் கபதம்ஸம் வாதரக்தம் பகந்தரம் விரணரோகம்:—அயஸ்க்ருதி, ஏலாத்யரிஷ்டம், மஞ்ஜிஷ்டாரிஷ்டம், மதுகாரிஷ்டம், [illegible], விடங்காரிஷ்டம், கதிராஸவம், குக்குல்வாஸவம், மத்வாஸவம், லோத்ராஸவம், ஸாரிபாஸவம்.

அபஸ்மாரம், மூர்ச்சை:—ஸிரபானகம்.

கெற்பாசயரோகம், ஸ்தனரோகம்:—வஜ்ஜிரகாஞ்சிகம்.

ஸ்திரீரோகம்:—லக்ஷ்மணாரிஷ்டம்.

பாலரோகம்:—அரவிந்தாஸவம்.

மதாத்யரோகம்:—ஸ்ரீகண்டாஸவம்.

மருந்தீடு:—ஸிரீஷாரிஷ்டம்.

மற்றீரோகம்:—ஸாரஸ்வதாரிஷ்டம்.

மேதைவிருத்தியாக:—ஸாரஸ்வதாரிஷ்டம்.

ஆம்லபித்தம்:—புநர்நவாஸவம்.

ஸ்தூலரோகம்:—அயஸ்கிருதி, பூஸ்த்வாஸவம், லோஹாஸவம்.

கிருமிரோகம்:—விடங்காரிஷ்டம்.

மலபந்தம்:—அபயாரிஷ்டம், தந்த்யரிஷ்டம், திராக்ஷாரிஷ்டம்.

தாதுக்ஷயத்திற்கு:—திராக்ஷாரிஷ்டம், ஜாயபலாரிஷ்டம், விருஷாஸவம், நாரிகேளாஸவம், ம்ருதசஞ்சீவினிஸுரா, லவங்காஸவம்.



# ஆஸவாரிஷ்டபாகவிதி.

ஜனங்களுக்கு உபயோகப்படும்படியான மதுவர்க்கங்கள்:—ஆஸவம், அரிஷ்டம், சீதரஸீது, பக்குவரஸீது, ஸுரா, ப்ரஸன்னா, காதம்பரீ, ஜகலம், மேதகம், இன்னவகம், வாருணீ, ஸுக்தம், குடஸுக்தம், இக்ஷுஸுக்தம், திராக்ஷாஸுக்தம், சுக்ரம், துஷாம்பு, ஸௌவீரம், காஞ்ஜிகம், சண்டாகி எனப் பலவகைப்படும். அத்தகைய மதுவர்க்கங்களின் விவரங்களையும் பாக லக்ஷணங்களையும் இந்நூலாசிரியர் இயற்றிய பேஷஜகல்பம் என்னும் நூலில் விரிவாய்க் காணலாம்; எனினும், ஆஸவம் அரிஷ்டம் என்னும் மதுக்களின் செய்பாகங்களை இந்நூலின்கண் கூறுதல் அத்யாவசியமாதலால், அவற்றை ஒருவாறு சுருக்கிக் கூறுவாம்.

## ஆஸவம், அரிஷ்டம் இவைகளின் விவரம்.

ஔஷதிகளை இடித்துச் சூரணித்து ஜலமுதலிய திரவ பதார்த்தங்களிலிட்டு காய்ச்சாமல் பக்குவம் செய்யப்படும் மதுவுக்கு ஆஸவம் எனவும், ஔஷதிகளைக் கஷாயமாகக் காய்ச்சிப் பக்குவப்படுத்தும் மதுவுக்கு அரிஷ்டம் எனவும் பெயர்.

## ஆஸவம், அரிஷ்டம் இவைகளின் செய்பாகம்.

இவ்விருவகை மதுக்களைப் பக்குவப் படுத்துவதற்குப் பொதுவாகத் திராக்ஷைக்கனி, தேன், வெல்லம், காட்டாத்திப் பூ, காரமும் வாசனையுமுள்ள கற்கவர்க்கம், அந்தந்த மதுவர்க்கத்திற்குரிய முக்கியமான பல ஔஷதிகள் அவசியம். ஔஷதிவர்க்கங்களையும் கற்கங்களையும், காட்டாத்திமலர், திராக்ஷை இவைகளையும் நன்கு இடித்துச் சூரணித்துப் பழைய மண்பாண்டத்திலிட்டு, அதற்கு ஏற்ற திரவங்களை அல்லது ஜலத்தை அளவுப் பிரகாரம் பெய்து, வெல்லத்தைக் கரைத்து, தேனையும் கலந்து, மேல்மூடிச் சீலமண்செய்து, குறித்தகாலம் வரையில் சாஸ்திரத்தில் கூறியவண்ணம் பூப்புடம், தான்யபுடம், சூர்ய

புடம், காற்றில்லாவிடத்துவைத்தல் முதலியவைகளால் பக்குவப்படுத்திப் பிறகு, வடிகட்டிக்கொள்வதே ஆஸவம் எனப்படும். ஔஷதிகளையும், திராக்ஷாமுதலிய கனிகளையும் கஷாயம் வைத்து வடிகட்டி, அதில் வெல்லத்தைக் கரைத்துத் தேனைக் கூட்டி, கந்தத் திரவியத்தையும் காட்டாத்திப்பூவையும் சூரணித்துத் தூவி, மட்பாண்டத்திலிட்டு மூடிச் சீலைமண்செய்து, முன்போல் ஸந்தான முறையால் சேகரித்த மதுவுக்கு அரிஷ்டம் எனப்பெயராம்.

### அளவு கூறிவிடத்து சேர்க்கவேண்டிய எடை விவரம்.

பதார்த்தங்களின் அளவைக் கூறாதவிடத்து, கந்தத் திரவியங்கள் 10 - பலமானால், தேன் 50 - பலமும், வெல்லம் 100 - பலமும், ஜலம் அல்லது திரவபதார்த்தம் 1 - துரோணமும் சேர்த்தல் வேண்டும்.

### ஸந்தான காலம்.

ஸந்தான விதிக்குக் கால அளவு குறிப்பிடாத விடத்தில் மருந்து சாமான்களின் அளவுக்கும், சாராம்சத்திற்கும் தக்கவாறு, ஒரு பக்ஷமுதல் ஒரு மண்டலம் வரையில் புடபாகத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதற்குள் மதுவின் வாசனை உண்டாகாவிடில், அத்தகைய வாசனை உண்டாகிற பரியந்தம் மீண்டும் புடபாகத்திலேயே வைத்தல் அவசியம்.

### பிரமாணம்.

உட்கொள்ளும் அளவைக் கூறாவிடத்து தேசதேச காலத்தினையும், வியாதியின் பலாபலத்தையும் அனுசரித்து, ஒரு தோலா முதல் மூன்று தோலா வரையில் கொடுக்கலாம்.

### பத்தியக்கிரமம்.

பத்தியத்தை விதித்துக் கூறவில்லை எனில், இச்சாபத்தியம் இருத்தலே நலம்.



ஓம்

# ஆஸவாரிஷ்ட கல்பம்.

### கடவுள் வணக்கம்.

வாசவ னாதி யாய வானவர்க் கருள்வான் சங்கம்
மூசொளி யாழி ஞான முத்திரை சுதைக்கு டங்கொள்
மாசிலா மூர்த்தி யாந்தன் வந்திரி பதம் வணங்கி
ஆசவா ரிட்ட கற்ப மறைகுவன் தமிழின் மாதோ.

### அசோகாரிஷ்டம்.

புதிதான அசோகப்பட்டை துலாம் - 1, சிறு துண்டுகளாக நறுக்கி இடித்து, 32 படி ஜலம்விட்டு நான்கிலொன்றாய் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, அதில் பழயவெல்லம் 2 துலாம் கரைத்துப் பின் காட்டாத்திப்பூ பலம் 16, சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மஞ்சள், கோரைக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, நெய்தற்கிழங்கு, ஆடாதோடைவேர், திரிபலை வகைக்குப் பலம் 1, பொடித்துப்போட்டுக் கலக்கி மேல்மூடிச் சீலைமண்செய்து 1-மாதம் வைத்திருந்து, பின் வடிகட்டி உபயோகிக்க—கர்ப்பாசய சம்பந்தமான பற்பல பிணிகள் நீங்கும். புத்திரோத்பத்தி யுண்டாகும். பெரும்பாடு, ரக்தபித்தம், மூலம், அக்கினிமந்தம், அன்னத்வேஷம், வெட்டை இவைகளையும், இவைகளுடன் கூடிய ஜ்வரம் வீக்கம் முதலிய பற்பலபிணிகளையும் போக்கும். மஞ்சள், தாமரைக்கிழங்கு இவைகளை நீக்கி ரக்தசந்தனம், மாங்கொட்டைப்பருப்புக் கூட்டிச் செய்வதுமுண்டு.

### அபயாரிஷ்டம்.

கடுக்காய்த்தோல் 1 பிரஸ்தம், ஆமலகம் 1 பிரஸ்தம், பேய்க்குமட்டி, விளாம்பழம், வட்டத்திருப்பி, சித்திரமூலம், வகைக்கு 2 - பலம் சேர்த்திடித்து, 2 - துரோண ஜலத்திலிட்டுக்காய்ச்சி, அரை துரோண கஷாயமாக வடிகட்டி நெய்பாண்டத்திலிட்டு, வெல்லம் 1 - துலாம்போட்டு மூடி, மண்ணில்

செய்து 1-பக்ஷம் வைத்தெடுத்துக்கொள்ளவும். இதனை தினம் உட்கொண்டுவர—க்ராஹணி, மூலம், ப்லீஹம், ஹ்ருதயரோகம், பாண்டு, காமாலை, விஷசுரம், ஜ்வரம், காசம், சுவாஸம், உதாவர்த்தம் முதலியவைகளைக் கண்டிக்கும்.

### அம்ருதாரிஷ்டம்.

சீந்திற்கொடி பலம் - 100, தசமூலம் வகைக்குப்பலம்-10, இவைகளைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கல்லுரலிலிட்டு மைய இடித்து 4-துரோணம் ஜலம்விட்டுச் சுண்டக்காய்ச்சி துரோணக் கியாழமாகவடித்து, அதில், பழையவெல்லம் பலம் - 300 கரைத்து, காட்டாத்திப்பூ பலம் - 16, ஓமம் பலம்-16, பற்பாடகம் பலம்-2, த்ரிகடு, கடுகுரோஹணி, அதிவிடயம், சிறுநாகப்பூ, வெட்பாலையரிசி, ஏழிலைப்பாலைமரப்பட்டை, வகைக்குப் பலம் - 1, சூரணித்துக் கூட்டி, பழகிய நெய்ப்பாண்டத்திலிட்டு மேல்மூடிச் சீலைமண்செய்து ஒருபுறத்தில் வைக்கவும். பிறகு, ஒருமாதம் கழித்து நன்றாய் வடிகட்டிப் பத்திரப்படுத்தவும். இதில் கால்பலம்முதல் 1 - பலம் வரையில் உட்கொண்டுவர—சர்வ ஜ்வரங்களும் தீரும்.

### அயஸ்க்ருதி.

அசனாதிகணம் வகைக்குப் பலம் - 20 இடித்து, 4-துரோணஜலத்திலிட்டு 1 - துரோணமாய்க் காய்ச்சி வடித்த கியாழத்தில், வெல்லம் பலம் 200, தேன் ஆடகம் ½ கூட்டி, வத்ஸகாதிகணம் வகைக்குப் பலம் 1, திப்பிலி பலம் 4, பொடித்துப்போட்டு மெல்லிய இரும்புத்தகடுகள் பலம் 50 கூடப்போட்டு மூடி, அரக்குப்பூசி சீலைமண்செய்து தான்யபுடத்தில் வைக்கவும். பானையைச்சுற்றி கருங்காலிச்சட்டைக் கரியைப் போட்டு 1 - மாதம் தான்யபுடம்வைக்க இரும்புத்தகடுகள் கரைந்துபோம். பின்பு, வடிகட்டிக் கொள்ளவும். மஞ்சள் நிறமாயிருக்கும். இதனால்—மேகம், குஷ்டம், பாண்டு, க்ரஹணி, ஸ்தௌல்யம், க்ருமி, அருசி தீரும்.



### அர்ஜுனாரிஷ்டம்.

மருதம்பட்டை பலம் 100, திராக்ஷைப்பழம் பலம் 50. இலுப்பைமலர் பலம் 20, இவைகளை மசியஇடித்து 4-துரோண ஜலத்திலிட்டு காலில் ஒன்றாய்க்காய்ச்சி வடித்து, அதில் வெல்லம்பலம் 100, காட்டாத்திப்பூ பலம் 20, சேர்த்து 1 - மாதம் பாண்டத்தில்மூடி வைத்திருக்க அரிஷ்டம் சித்தியாகும். இதனால்—ஹ்ருத்ரோகம், புப்புஸரோகம் தீரும். பலம் உண்டாகும்.

### அஷ்டதசாரிஷ்டம்.

பெருங்குமிழ், திரிபலை, மிளகு, திப்பிலி, கண்டங்கத்திரிப்பழம், சோதக்னம் இவைகள் வகைக்கு 100-பலம் இடித்துப் பொடித்துப் பாண்டத்திலிட்டு 1 - துரோண ஜலத்தைவிட்டு சர்க்கரை 1-துலாம், தேன் 1-துலாம்சேர்த்து மூடிச்சீலைசெய்து 7-நாள் கடும் வெயிலிலும், 14-நாள் நிழலிலும் வைத்தபின்னர் வடிகட்டிப் பிரயோகிக்க—வாத, பித்த, கப சம்பந்தமான சகல சோகை, பாண்டு. காமாலை, வீக்கம் தீரும்.

### அஸ்வகந்தாரிஷ்டம்.

அஸ்வகந்தி பலம் - 50, நிலப்பனங்கிழங்கு பலம் - 25, சந்தனம், செஞ்சந்தனம், கருஞ்சிவதை, வெண்சிவதை, கறிமஞ்சள், மரமஞ்சள், மஞ்சிஷ்டி, கடுக்காய், அதிமதுரம், சன்னராஷ்டம, நிலப்பூசனி, மருதம்பட்டை, கோரைக்கிழங்கு, சித்திரமூலம், வசம்பு, சிறுபூனைக்காஞ்சொரிவேர், வகைக்குப் பலம் - 10, இவைகளைப் பொடிபடவிடித்து, 8-துரோண ஜலத்திலிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய் வடிகட்டிய கஷாயத்தில் தேன்பலம்-300 சேர்த்துப் பழகிய மண்பாண்டத்திலிட்டு, காட்டாத்திப்பூ பலம் 16, திரிகடுகு, திரிஜாதம், சிறுநாகப்பூ, நாழல் வகை ஒன்றுக்குப் பலம் இரண்டு கூட்டி, இடித்துச் சூரணித்துச் சேர்த்து, மேல்மூடிச் சீலைசெய்து, 1 - மாதம் சென்றபின் எடுத்து வடிகட்டி, அரைப்பலம் வீதம் எடுத்து

காலைமாலை உட்கொண்டுவர—ஜ்வரம், வாதரோகம், மூர்ச்சை அபஸ்மாரம், உன்மத்தம், சோகை, தேகவெளுப்பு, மூலம், மந்தாக்கினி தீரும். இரத்தசுத்தியுமுண்டாகும்.

## அஸ்ருஜாரிஷ்டம்.

மிருதசஞ்சீவினிஸுரா, ஆடாதோடைச்சாறு இவைகளை சுபதினத்தில் சுபநக்ஷத்திரத்தில் சமனாய்க்கூட்டி க்ருதபாண்டத்திலிட்டுமூடிச் சீலைமண்செய்து 7-நாள் வைக்க அரிஷ்டமாகும். 20-முதல் 30-துளிவரையில் ஜாமத்திற்கு ஒருதடவை ஜலத்தில் கலந்துகொடுக்க—காசம், சுவாசம், உரக்ஷதம், ரக்தபித்தம், க்ஷயம், ஜ்வரம் தீரும்.

## ஏலாத்யரிஷ்டம்.

ஏலக்காய் பலம் - 50, ஆடாதோடை பலம் - 20, சீந்திற்கொடி, வெட்பாலை, மஞ்சிஷ்டி, தந்திமூலம், விலாமிச்சம்வேர், மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, அதிமதுரம், வாகைப்பட்டை, வன்னிப்பட்டை, மருதம்பட்டை, வெண்மருதம்பட்டை, வேப்பம்பட்டை, நிலவேம்பு, இலுப்பைப்பூ, கோஷ்டம் இவைகள் வகைக்குப் பலம் - 8, இவற்றை இடித்துத் தூளாக்கி, 8 - துரோணஜலத்திலிட்டுக் காய்ச்சி, 1 - துரோணமாகச் சுண்டினபின் வடிகட்டி, அத்துடன் தேன் பலம் 300, காட்டாத்திப்பூ பலம் 16, திரிகடுகு, சந்தனத்வயம், சாதுர்ஜாதம், ஜடாமாஞ்சி, தேவதாரு, கோரைக்கிழங்கு, பனைக்குருத்து, நன்னாரித்வயம் வகைக்குப்பலம் 1, சூரணித்துக்கூட்டி மூடிச் சீலைமண்செய்து 1-மாதம் கழித்து வடித்து வைத்துக்கொண்டு, 1 - பலம் வீதம் உட்கொள்ள—விஸர்ப்பி, மசூரிகா, புழுவெட்டு, விஸ்போடகம், பகந்தரம், நாடிவிரணம், நெருக்கு, பிரமேகபிடகம், துஷ்டவிரணம், காசம், சுவாசம் தீரும். பெருங்கிழங்கு பலம் 8, கருங்காலிக்கட்டை பலம் 8, கூட்டிச் செய்யும்வண்ணம் வேறுசிலநூல்கள் கூறுகின்றன.



## கற்பூராரிஷ்டம்.

தென்னங்கள்ளு பலம் - 200, பழகிய மட்பாண்டத்திலிட்டு, அதில் கற்பூரம் பலம் - 8, சுக்கு, மிளகு, ஓமம், ஏலக்காய், கோரைக்கிழங்கு வகைக்குப் பலம் - 1 பொடித்துப் போட்டுக்கலக்கி, மூடிச் சீலைசெய்து, ஒருமாதம் வைத்துப் பின் வடிகட்டிக்கொண்டு சுத்தஜலத்தில் 10-முதல் 20 - துளிகளிட்டு உட்கொள்ள—அஜீரணம், பேதி, வாந்தி, வயிற்றுவலி விஷூசி தீரும். இது மேற்கண்ட ரோகங்களுக்குப் பரமௌஷதம்.

## கனகாரிஷ்டம்.

கருமத்தைச் சமூலம் நிழலிலுணர்த்தி இடித்த சூரணம்; ஆடாதோடைவேர்ச்சூரணம் வகைக்குப் பலம் 8, அதிமதுரம், அரிசித்திப்பிலி, சிறுநாகப்பூ, சுக்கு, சிறுதேக்கு, தாளிசபத்திரி, கண்டங்கத்திரிவேர் வகைக்குப் பலம் - 2, காட்டாத்திப்பூ பலம் 16, திராக்ஷை பலம் 20, இவைகளை நன்றாய் இடித்துப் பொடித்து, பழகிய நெய்ப்பாண்டத்திலிட்டு, சுத்தஜலம்படி 32 விட்டு அதில் சர்க்கரை துலாம் 1, தேன் துலாம் அரை, சேர்த்துக் கலக்கி மேல்மூடிச் சீலைமண்செய்து, 1 - மாதம் வைத்துப் பின்னெடுத்து வடிகட்டி, அரைப் பலம் வீதம் தினமிரண்டுவேளையுட்கொண்டுவர—சுவாசம், காசம், க்ஷயம், இருமல், ஜ்வரம், ரக்தபித்தமுதலியவைகள் குணமாகும். இருதயம் சுவாசாசயம் இவைகளை வலுக்கச் செய்யும்.

(வேறு.)

இடித்துக் கொழித்து விதைநீக்கின புதிதான நெல்லிக்காய் 100-பலம், அரிசித்திப்பிலி, வாய்விடங்கம், மிளகு, இவை வகைக்குக் கால்படி, பூனைக்காஞ்சொறிவேர், திப்பிலிமூலம், கமுகு, செவ்வியம், கொடிவேலிவேர், மஞ்சிஷ்டி, ஏலவாலுகம், பாச்சோத்தி வகைக்குப் பலம் 1, கோஷ்டம், மஞ்சள், கடுக்காய், தேவதாரு, நன்னாரி, பெருநன்னாரி, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி இவைகள் வகைக்குப் பலம் ½. புதிதான

சிறுநாகமலர் பலம் - 4, இவைகளை யிடித்துப் பொடித்து 2 துரோணஜலத்திலிட்டுக் காய்ச்சி அரை துரோண கஷாயமாய் சுண்டினபின், வடிகட்டிய கஷாயத்தில், திராக்ஷாசூரணம் 1-ஆடகம், சர்க்கரை 2 - துலாம், புதிதான தேன் ½ - படி. சேர்த்துப் பழகின பாண்டத்தில் நெய்பூசி அகரு, சர்க்கரை இவைகளால் புகைத்து, அதில்பெய்து, சாதிஜாதம், வெட்டிவேர், இலாமிச்சம்வேர், யாக்கு வகைக்கு 1 - தோலா சூரணித்துத் தூவி மேல்மூடி சந்திலெழுன் செய்து 1 - பக்ஷம் வைத்திருக்க சித்தமாகும். இதைப் பிரயோகிக்க—மூலம், கிரஹணி, உதாவாய்வு, ஜ்வரம், ஹிருத்ரோகம், பாண்டுரோகம், விக்ஷம், குல்மம், காசம், கபம், ஆமவாதம், அரோசகம், நரை, திரை, வழுக்கை முதலான பலதோஷங்கள் தீரும்.

## கிராதாரிஷ்டம்.

நிலவேம்பு, கடுகரோகிணி, கோரைக்கிழங்கு, சீந்திற் கொடி, பற்படாகம், பேய்ப்புடல் இவைகள் வகைக்குப் பலம் - 10, இடித்துத் தூளாக்கி, 8 - படி ஜலம்விட்டு 2-படியாய்ச் சுண்டவைத்து ஆறினபின் பிசைந்து வடிகட்டிச் சமன் தேன்கூட்டிக் காட்டாத்திப்பூ பலம் 8, பொடித்துப்போட்டு சீலைமண் செய்து, 1-மாதம் கழித்து வடிகட்டி யுபயோகிக்க—சர்வ ஜ்வரங்களையும் நன்கு கண்டிக்கும்.

## குடஜாரிஷ்டம்.

வெட்பாலைவேர் பலம் 4, திராக்ஷை பலம் 50, இலுப்பைப்பூ பலம் 10, பெருங்குமிழ் பலம் 10, இவைகளை 4 - துரோணஜலத்திலிட்டுக் காய்ச்சி நாலில் ஒன்றாய்வடித்த கஷாயத்தில், 20 - பலம் காட்டாத்திப்பூச் சூரணமும், 100-பலம் வெல்லமும் சேர்த்து மட்பாண்டத்திலிட்டு சீலைசெய்து, 1 - மாதஞ் சென்றபின் வடித்து உபயோகிக்க—ஜ்வரங்களைக் கண்டித்து பசிதீபனத்தை யுண்டாக்கும். மேலும், அசாத்திய க்ரஹணி, ரக்தாதிசாரம் இவைகளையும் கண்டிக்கும்.



## தக்ராரிஷ்டம்.

ஓமம், நெல்லிமுள்ளி, கடுக்காய், மிளகு வகைக்குப் பலம் 3, பஞ்சலவணம் வகைக்குப் பலம் 1, இவைகளைச் சூரணித்து படிமோரில் கலந்து பாண்டத்திலிட்டு மூடி, 1 - மாதம் வைத்தெடுத்து உபயோகித்துவர—குன்மம், உதரரோகம், கிருமி, வீக்கம் தீரும். தீபனமும் அதிகரிக்கும்.

## தசமூலாரிஷ்டம்.

தசமூலம், மஞ்சள், ஜீரகம், ஜீவகம், ரிஷபகம் வகைக்குப்பலம் - 5 சிதைத்து, 4 - துரோண ஜலத்திலிட்டுக் காய்ச்சி 1-துரோணமாய் சுண்டவைத்து வடிகட்டி, 200 - பலம் வெல்லமும், ½-படி தேனுங்கூட்டி ஞாழல், கோரைக்கிழங்கு, மஞ்சிஷ்டி, வாய்விளங்கம், அதிமதுரம், லவங்கப்பட்டை, லோத்திரப் பட்டை, பொன்னாவாரை வகைக்குப் பலம் - 1 சூரணித்துக் கூட்டி, நன்றாய்க் கலக்கி மேல்மூடிச் சீலைசெய்து, போதுமான நாள்வரையில் வைத்திருந்து பிறகு, வடிகட்டிக்கொள்க. இது ஆமவாதம், ஹிருத்ரோகம், கபரோகம், பாண்டுரோகம், ரக்தபித்தம் முதலிய பலபிணிகளைக் கண்டித்துத் தீபனத்தையுண்டாக்கும்.

## தந்தியாரிஷ்டம்.

தந்திமூலம், சித்ரமூலம், தசமூலம், திரிபலை இப்பதினைந்தும் வகைக்கு 1 - பலம் நிறுத்து இடித்து, 1 - துரோணஜலத்திலிட்டுக் கால்பாகமாய் சுண்டக் காய்ச்சி வடிகட்டி, அதில் வெல்லம் 1-துலாம் சேர்த்துப் பழமையான பாண்டத்திலிட்டு மூடி, 1 - மண்டலம் வைத்திருந்துப் பின் வடிகட்டி உபயோகிக்க—வாதரோகம், மூலம், பாண்டு, உதரரோகம் தீரும். மலசோதனையாகும். தீபனமும் ருசியும் அதிகரிக்கும். திரிபலையை நீக்கிய முறைகளுங் கூறப்பட்டுள்ளன. காட்டாத்திப்பூ பலம் - 16 சேர்த்துச் செய்வதுமுண்டு. இதனைச் சேர்த்துச் செய்வதே சாலச் சிறந்தது.

### தாத்ரியாரிஷ்டம்.

தேறின நெல்லிக்காய் 2000 இடித்துப் பிழிந்த சாற்றில், எட்டில் ஒருபங்கு தேனும், 50 - பலம் சர்க்கரையும், 2 - பலம் திப்பிலி சூரணத்தையும் கூட்டிக் கிருதபாண்டத்திலிட்டு வாய் மூடிச் சீலைசெய்து 15 - நாள் வைத்திருந்து, பின்பு வடிகட்டி உபயோகித்துவர—பித்தம், ஹ்ருதயரோகம், தாகம், தாபம், விக்கல், வாந்தி, அரோசகம், பித்தவெட்டை, இருமல், காசக்ஷயம் தீரும்.

### தான்யகாத்யரிஷ்டம்.

மல்லி, விலாமிச்சம்வேர், கோரைக்கிழங்கு, வேம்பு வகைக்கு 1 - பலம், தாமரைக்கிழங்கும், கோஷ்டமும் இரண்டிரண்டுபலம், சீந்திற்கொடியும் திரிபலையும் வகைக்கு 8 - பலம், இவைகளை இடித்து, 2 - துரோண ஜலத்திலிட்டு பதினாறில் ஒன்றாய்க் கண்டக்காய்ச்சி வடிகட்டி. மரமஞ்சள்பொடி 1 - பலம், தேன் 16-பலம் கூட்டி மதித்து, கிருதபாண்டத்திலிட்டு மூடிச் சீலைசெய்து 1 - மாதம் வைத்துப் பின்பு வடிகட்டிக்கொள்ளவும். இது சர்வ ஜ்வரங்களையும் கண்டிக்கும்.

### திராக்ஷாரிஷ்டம்.

திராக்ஷைப்பழம் பலம் - 50, நைய இடித்து 32 - படி ஜலத்திலிட்டு, 8-படியாய்க் காய்ச்சிப்பிசைந்து வடிகட்டி, வெல்லம் 200 - பலமும், தேன் 50 - பலமும் சேர்த்து சாதுர் ஜாதம், இலையரிசி, மிளகு, திப்பிலி, இந்துப்பு வகைக்குப் பலம் ஒன்றரை பொடித்துப்போட்டு சீலைசெய்து மண்டலம் பொருத்து வடிகட்டி, 1 - பலம் வீதம் சாப்பிட்டுவர— எலும்புருக்கி, கண்டமாலை, காசம், க்ஷயம், மலச்சிக்கல் தீரும். பலம் கொடுக்கும்.

(இலையரிசிக்குப்பதில் ப்ரியங்குவையும், இந்துப்புக்குப் பதில் வாய்விளங்கத்தையும் சேர்க்கும்படி சாரங்கதர ஸம்ஹிதை கூறும்.)



(வேறு.)

திராக்ஷைப்பழம் பலம்-100 இடித்து, 4 - துரோணஜலத்திலிட்டு வேகவைத்து, அட்டிய கஷாயம் 1 - துரோணம்: இதனைச்சந்தனம், அகில் முதலியவற்றால் புகையூட்டி, கற்பூரம் பூசிய கிருதபாண்டத்திலிட்டு, அத்துடன் வெல்லம் பலம் 200, தேன் பலம் - 50 கூட்டி, காட்டாத்திப்பூ பலம் 20, சாதுர் ஜாதம், சுக்கு நீக்கிய பஞ்சகோலம், லவங்கம், ஜாதிக்காய், மிளகு, ரேணுகம், தக்கோலம் வகைக்குப்பலம் 1, சூரணித்துச் சேர்த்து, ஒன்றுபடக்கலக்கி மேல் பாண்டத்தால்மூடி, ஏழுசீலை செய்து, ஒருமண்டலம் வைத்திருந்து, பக்குவமான பின்பு, பிரித்து வடிகட்டி, 1 - பலம் வீதம் உட்கொள்ள—க்ரஹணியைப்போக்கி, தீபனத்தை யுண்டாக்கும். மூலம், வயிற்றுப் பொருமல், கிருமி, வலி, குஷ்டம், விரணம், நேத்திரரோகம், சிரோரோகம், களரோகம், ஜ்வரம், பாண்டு, காமாலை முதலியவைகளைக் கண்டித்து, பலத்தை யுண்டுபண்ணும்.

### துராலபாரிஷ்டம்.

சிறுகாஞ்சொரி 32 - பலம், நெல்லிமுள்ளி 16 - பலம், சித்ரமூலம், தந்திமூலம் இவை 2 - முஷ்டிப்பிரமாணம், புதிதானகடுக்காய் 100, இவைகளை 4 - துரோணம் ஜலத்திலிட்டு 1 - துரோணமாகக் கண்டக்காய்ச்சி வடிகட்டி, அதில் வெல்லம் 200-பலம் கரைத்து, தேன்படி ¼ - கூட்டி, பிரியங்கு, அரிசித் திப்பிலி, வாய்விளங்கம், காட்டாத்திப்பூ வகைக்குப் பலம் 2, பொடித்துப் போட்டு க்ருதகும்பத்திலிட்டு மூடிச் சீலைசெய்து 1-பக்ஷம் வைத்திருந்து, பிறகு வடிகட்டிச் சாப்பிட்டுவரின்— க்ரஹணி, பாண்டு, மூலம், குஷ்டம், மேகம், விசர்ப்பி, ரக்தபித்தம், கபம் தீரும். தேககாந்தியும், குரலோசையும் உண்டாகும்.

### பப்பூலாரிஷ்டம்.

கருவேலன்பட்டை இரண்டு துலாம் பஞ்சுபோலிடித்து 4 - துரோண ஜலத்திலிட்டுக் காய்ச்சி 1 - துரோண கஷாய

மாக வடிகட்டி, அதில் பழையவெல்லம் 3 - துலாம், காட்டாத் திப்பூ 16 - பலம், திப்பிலி 2 - பலம், ஜாதிக்காய், தக்கோலம், லவங்கம், சாதுர்ஜாதம், மிளகு, இவைகள் வகைக்குப் பலம்-1 பொடித்துக் கலந்து, வாய் பதனம்பண்ணி, ஒருமாதம்வைத் திருந்து வடிகட்டி உபயோகிக்க—க்ஷயம், குஷ்டம், அதி சாரம், க்ரஹணி, பிரமேகம், காசம், சுவாசம், இவைகள் நாசத்தை யடையும்.

### பலாரிஷ்டம்.

சிற்றுமுட்டி 1-துலாம், அஸ்வகந்தி 1-துலாம், இடித்துப் பொடித்து 4 - துரோணஜலம்விட்டு 1 - துரோணமாய் சுண்ட வைத்துவடிகட்டி, வெல்லம் 300-பலம்கரைத்து, காட்டாத்திப்பூ பலம் 16, ஏரண்டவேர், காகோலி, க்ஷீரகாகோலி வகைக்குப் பலம் 2, அரத்தை, ஏலம், கடுக்காய், தேவதாரு, லவங்கம், விலாமிச்சு, நெருஞ்சில்வேர், முதியார்க்கூந்தல் வகைக்கு 1-பலம் பொடித்துப்போட்டுமூடிச் சீலைசெய்து 1-மாதம்வைத்துப் பின் வடிகட்டி, தக்கஅளவுசாப்பிட்டுவர—வாதரோகங்களும், ஜ்வர ரோகங்களுந்தீர்ந்து பலம் புஷ்டி தீபனம் உண்டாகும். கடுக் காய், தேவதாரு, முதியார்கூந்தல் இவைகளைச் சேர்க்காமல் செய்யும்படி சில நூல்களில் கூறப்பட்டுள்ளன.

### 4. பற்பாடகாத்யரிஷ்டம்.

பற்பாடகம் பலம் - 100, பொடித்து 4 - துரோண ஜலத்தி லிட்டு 1 - துரோணமாக வடித்த கஷாயத்தில், சர்க்கரை பலம் 200, தேன் பலம் - 16, சேர்த்து, காட்டாத்திப்பூ பலம்-16, சீந் திற்கொடி, கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரிவேர், தேவதாரு, மரமஞ்சள், சிறுபூனைக்காலிவேர், சித்திரமூலம், செவியம், திரி கடுகு, வாய்விளங்கம் வகைக்குப் பலம் - 1 சூரணித்துக் கூட்டி, மூடிச்சீலைமண்செய்து ஒருமாதம் சென்றபின்வடித்துக் கொள்ளவும். இதனையுட்கொண்டுவர—பாண்டு, குன்மம், பெரு வயிறு, ஹலீமகம், ப்லீஹம், யக்ருத், காமாலை, விஷஜ்வரம், அஷ்டீலா முதலான நோய்கள் தீரும்.



### பார்த்தாரிஷ்டம்.

மருதம்பட்டை வீசை - 12 இடித்து, 4-மடங்கு ஜலத்தி லிட்டு நாலிலொன்றாய்க்காய்ச்சி வடிகட்டி, சர்க்கரை வீசை 6, ஜடாமாஞ்சி, அமுக்கிரா, தாதகி பூ வகைக்கு 5 - பலம் பொடித் துக்கலந்து, கிருதபாண்டத்திலிட்டு சீலைசெய்து, 1 - மாதம் கழித்து வடிகட்டி யுபயோகிக்க—ஹ்ருதயத்தைப் பலப் படுத்தும்.

### மண்டூராரிஷ்டம்.

சுத்திசெய்த மண்டூரம் 50 - பலம், சுத்திசெய்த அரப் பொடி அல்லது அயத்தகடு 50 - பலம், பழையவெல்லம் 150 - பலம், இலந்தைப்பழம் 3-பிரஸ்தம், சித்ரமூலம் பலம் 2, சிரும் பம் பலம் 2, திப்பிலி, க்ருமிகாசினி வகைக்கு $\frac{1}{4}$ - குடவம் திரிபலை மூன்றுஞ்சேர்த்து 1 - பிரஸ்தம், இவைகளை இடித்துப் பானையிலிட்டு 1-துரோணஜலத்தைக்கொட்டி, மேல்மூடிச் சீலை செய்து ஒருபக்ஷம் வைத்தெடுத்து வடிகட்டி, 1 - தோலாவீதம் காலை மாலை யுட்கொண்டுவர—ரக்தபித்தம், பாண்டு, க்ருமி ரோகம், மூலம், குஷ்டம், காசம், சுவாசம், கபம், ஆம சோபை முதலியவைகள் குணமாகும்.

### மதுகாரிஷ்டம்.

இலுப்பைப்பூ படி 4, வாய்விளங்கம் படி 2, கொடிவேலி படி 1, சேங்கொட்டை ஆடகம் 1, மஞ்சிஷ்டி பலம் 8, இடித்து 12 - படி ஜலத்திலிட்டு 4 - படியாய் சுண்டக்காய்ச்சி வடி கட்டி, தேன் $\frac{1}{2}$ - ஆடகம், ஏலம், தாமரைக்கிழங்கு, அகில் வகைக்குப்பலம் 2 பொடித்துப் போட்டுமூடிச் சீலைமண்செய்து 1 - மாதம் வைக்க அரிஷ்டமாகும். இதனால்—குஷ்டம், பிர மேகம், விரணம், சோகை, ரக்தபித்தம், க்ரஹணி தீரும்.

### முஸ்தாரிஷ்டம்.

கோரைக்கிழங்கு 2 - துலாம், நன்றாய் மசிய இடித்து 4 - துரோண ஜலத்திற்போட்டு சுண்டக்காய்ச்சி 1 - துரோண

கஷாயமாய் வடிகட்டி, அதில் வெல்லம் 3 - துலாம் கரைத்து காட்டாத்திப்பூ பலம் 16, ஓமம், சுக்கு, மிளகு, லவங்கம், வெந்தயம், சீரகம், சித்திரமூலம், வகைக்குப் பலம்-2 சூரணித்துக்கூட்டி மூடிச் சீலைமண்செய்து 1 - மாதம் கழித்தெடுத்து வடிகட்டிஉட்கொண்டுவர—அஜீரணம், அக்னிமந்தம், க்ரஹணி, அதிசாரம், விஷூசி முதலியவைகளைப் போக்கும்.

### ம்ருதஸஞ்சீவினிஸுரா.

புதுவெல்லம் 100 - பலம், இதற்கு 8 - மடங்கு ஜலம் விட்டுக்கரைத்து அதில், இஞ்சி 2 - பலம், லோத்திரப்பட்டை 1 - குடவம், பாக்கு 1 - பிரஸ்தம், இலந்தம்பட்டை 1 - பிரஸ்தம், வேலம்பட்டை 1 - பிரஸ்தம் இவைகளை இடித்து வரிசைக்கிரமமாய்போட்டு மூடிச்சீலைமண்செய்து 20 - நாள் வைத்தெடுத்து மயூரயந்திரத்தில் மெதுவாய் எரித்துப் பின் பாக்கு, ஏலவாலுகம், தேவதாரு, லவங்கம், தாமரையிதழ், விலாமிச்சம்வேர், சந்தனம், சதகுப்பை, முச்சீரகம், மிளகு, பூலாக்கிழங்கு, ஜடாமாஞ்சி, லவங்கப்பட்டை, ஏலம், ஜாதிக்காய், முத்தக்காசு, கிரந்திதகரம், சிற்றாமல்லி, பேராமல்லி, சுக்கு, வெந்தயம் வகைக்கு ½ - பலம் பொடித்துப்போட்டு மறுபடியும் மெதுவாய் எரித்து கொதிக்கவைத்துப் பதத்தில் வடிகட்டிக் கொள்ளவும். இதனையுட்கொள்ள—ஆரோக்கியமும் பலமும் உண்டாகும்.

### ரஸாயனாரிஷ்டம்.

திப்பிலி, திப்பிலிமூலம், கடுக்காய்ப்பூ, கண்டங்கத்திரி கல்லுருவி, பாதிரி, சந்தனம், நெருஞ்சில், கடுக்காய் வகைக்குப் பலம் 16, இலந்தைப்பழம் 1, ஆடகம், தந்திமூலம், சித்ரமூலம் வகைக்குப் பலம் 25, இவைகளுக்கு 4 - மடங்கு ஜலம்விட்டு பாதியாக சுண்டவைத்து வடிகட்டி பாண்டத்திலிட்டு 200 - பலம் கற்கண்டு, 200 - பலம் லோஹத்தகடு, ப்ரியங்கு, திப்பிலி, லோத்திரம், திராக்ஷை, ஏலவாலுகம், கமுகு, சதகுப்பை, வேம்பு, வாலுழுவை வகைக்குப் பலம் 1, தேவதாரு பலம் 4,



கருங்காலி பலம் 4, தேன் 2 - பிரஸ்தம் கூட்டி, மேல்மூடிச்சீலை செய்து ¼ - மண்டலம் வைத்தெடுக்கவும். இதனால்—பலம், புஷ்டி, யௌவனம் உண்டாம். இரத்தசுத்தியும் இரத்தவிருத்தியும் உண்டாகும்.

### லக்ஷ்மணாரிஷ்டம்.

தருக்காளிச் சமூலம் 100 - பலம் இடித்து, 4 - துரோண ஜலத்திற்போட்டு 1 - துரோண கஷாயமாய் சுண்டினபின் வடிகட்டி, அதில் வெல்லம் 200-பலம் கரைத்து, காட்டாத்திப்பூ 16 - பலம், திராக்ஷை 16 - பலம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், திற்றுமுட்டி, திரிபலை, மஞ்சள், மரமஞ்சள், சந்தனத்வயம், ஓமம், ஜீரகம், பெருஞ்சீரகம், வில்வவேர் வகைக்கு 1 - பலம் சூரணித்துப் போட்டுக்கலக்கி, மேல்மூடிச் சீலைமண் செய்து, 1 -மாதம் வைத்துப் பின்பெடுத்து வடிகட்டி உபயோகிக்க—ஸ்திரீகளின்ரோகம் தீரும். இம்முறையில் திராக்ஷையைநீக்கிச் செய்வாருமுளர்.

### வாஸாரிஷ்டம்.

ஆடாதோடை பலம் 200, இடித்து, 8 - படி ஜலத்தில் போட்டு 2 - படியாய் சுண்டவைத்து வடிகட்டி, வெல்லம் பலம் 100, சேர்த்துக் கரைத்து, அத்துடன் காட்டாத்திப்பூ பலம் 8, சாதுர்ஜாதம், திரிகடுகு, தக்கோலம், கோரைக்கிழங்கு வகைக்கு 1 - பலம் பொடித்துப்போட்டு, சீலை செய்து, 1 - பக்ஷம் வைத்திருந்து நன்றாய் பக்குவமான பின், வடிகட்டி உபயோகிக்க—காஸம், வீக்கம், பாண்டு தீரும்.

### விடங்காரிஷ்டம்.

வாய்விளங்கம், கிரந்திதகரம், சிற்றரத்தை, லவங்கப்பட்டை, ஜாதிக்காய், வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, ஏலம், நெல்லிமுள்ளி, இவைகள் வகைக்குப் பலம் 5 - வீதம் நிறுத்து இடித்து, 8 - துரோணஜலத்தில் சேர்த்துக் காய்ச்சி, எட்டிலொன்றாய்ச் சுண்டவைத்து வடிகட்டிய கஷாயத்தில், 300 -

பலம் தேன்சேர்த்து, காட்டாத்திப்பூ பலம்-20, திரிஜாதம் பலம்-2, ப்ரியங்கு, சிறுநாகப்பூ, லோத்திரம், வகைக்குப் பலம்-1, திரிகடுகு பலம்-3, சூரணித்துக் கூட்டிப் பழைமையான க்ருதபாண்டத்திலிட்டு மூடிச் சீலைமண்செய்து, ஒரு மாதம் பொறுத்து வடிகட்டி உபயோகிக்க—வித்ரதி, ஊருஸ்தம்பம், அஸ்மரீ, மேகம், பிரத்யஷ்டீலா, பகந்தரம், கண்டமாலை, ஹநுஸ்தம்பம் முதலியவைகள் தீரும்.

### ஸாரஸ்வதாரிஷ்டம்.

வல்லாரை பலம் 20, தண்ணீர்விட்டான்கிழங்கு பலம் 20, நிலக்குமிழ், கடுக்காய்த் தோல், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், இஞ்சி, மிசி இவை வகைக்குப் பலம் 5, நறுக்கி 4-படி ஜலத்திலிட்டு 1-படியாய் சுண்டவைத்து இறுத்து, அதில் சருக்கரை 25-பலம், திராக்ஷை 20-பலம், தேன் 10-பலம், காட்டாத்திப்பூ 5-பலம், ரேணுகம், சிவதை, திப்பிலி, தேவதாரு, வசம்பு, கோஷ்டம், அமுக்கிராக்கிழங்கு, தான்றிக்காய், ஏலம், சீந்திற்கொடி, வாய்விளங்கம், லவங்கப்பட்டை, வகைக்கு 1-தோலா சூரணித்துக் கூட்டி, அத்துடன் தங்கத்தகடு 1-தோலா கூடப்போட்டு மூடி, தங்கத்தகடு கரைந்துபோகும் வரையிலும் வைத்திருந்து, பின்வடித்து ¼-தோலா பிரமாணம் பாலில் அநுபானித்து உபயோகிக்க—புத்தி, மேதை, பலம், காந்தி, வீரியம், வாக்குசுத்தி, ஆயுள்விர்த்தி இவைகள் உண்டாகும்.

இதில் உபயோகிக்கும் வல்லாரையை, அதிகாலையில் எழுந்திருந்து ஸ்நானஞ்செய்து பரிசுத்தமான மனதுடன் சுத்தமான விடத்திலிருந்து கொண்டுவரவேண்டும்.

### ஸிரீஸாரிஷ்டம்.

வாகைப்பட்டை பலம்-50 இடித்து, 2-துரோணம் ஜலத்திலிட்டுச் சுண்டக்காய்ச்சி, காலிலொன்றாக வடிகட்டிய க்வாதத்தில் வெல்லம் 200-பலம் கரைத்து, திப்பிலி, ஞாழல்,



கோஷ்டம், ஏலம், சிறுநாகமலர், சுக்கு, அரிசனத்வயம், அவுரிவேர், வகைக்குப் பலம் 1 சூரணித்துச்சேர்த்து நன்றாய் சீலைமண்செய்து, 1-மாதம் கழித்து வடிகட்டி உட்கொண்டுவர—இடுமருந்து தோஷந்தீரும்.

### ஜீரகாத்யரிஷ்டம்.

சீரகம் பலம்-200, இடித்துப் பாண்டத்திலிட்டு 4-துரோணம் ஜலத்தைவிட்டு, 1-துரோணமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிய கஷாயத்தில், 3-துலாம் பழைய வெல்லத்தைக் கரைத்துப் பின் காட்டாத்திப்பூ பலம்-16 சுக்கு பலம்-2, சாதுர்ஜாதம், முத்தம், ஜாதிக்காய், ஓமம், தக்கோலம், தேவதாரு வகைக்குப் பலம்-1 சூரணித்துச்சேர்த்து, பழைய பாண்டத்திலிட்டு மூடிச் சீலைமண்செய்து 1-மாதம் கழித்தெடுத்து, நன்றாய்வடிகட்டிக் கால்பலம் விதம் சாப்பிட்டுவர—பித்தவாய்வு, ஆசிகவாய்வு, விஷமாக்னி, க்ரஹணீ, அதிஸாரம், முதலானவைகள் தீரும்.

### ஆரிஷ்டவர்க்கம் முற்றிற்று.

# ஆ ஸ வ ம்.

## ஆயாமகாஞ்சிகம்.

கருப்புமணக்கத்தை அரிசிக்காடியும், நெற்பொரிமா காடியும் வகைக்கு 1 - ஆடகமும், அதிகமுத்தலும் பிஞ்சுமில்லாத வித்திறமான முள்ளங்கி - 64, இடித்து 1 - துரோணஜலத்தில் விட்டுப் புளிப்பேறினபின் வடிகட்டின காடியையுங்கூட்டி, அதில் க்ஷாரத்வயம், பிடாலவணம், ஓமம், மல்லி, இந்துப்பு, சௌவர்ச்சலவணம், மல்லி, காயம், செவ்வியம், சதகுப்பை வகைக்குப் பலம் 2, கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், வெண்கடுகு, சிற்றேலம், சித்ரமூலம் வகைக்குப் பலம் 1, பொடிசெய்துப் போட்டு, மேல்மூடிச் சீலைசெய்து, 1-பக்ஷம் வைத்துப் பிறகு, மேற்றெளிவை யுட்கொண்டுவர,—மகோதரம், குல்மம், ப்லீஹ விர்த்தி, ஹ்ருத்ரோகம், உதரசூலை, உப்பிசம், மந்தாக்னி, அரோசிகம், மூலம், பகந்தரம், வாதரோகம் தீர்ந்து—பலம், வர்ணம், தேஜஸ், ஆயுள் விர்த்தியாகும்.

## அரவிந்தாஸவம்.

அரவிந்தம், விலாமிச்சம்வேர், பெருங்குமிழ், கருநெய்தல், கோரைக்கிழங்கு, மஞ்சிஷ்டி, சிற்றாமுட்டி, ஏலம், நன்னாரி, ஜடாமாஞ்சி, கொட்டைக்கரந்தை, தான்றிக்காய், வசம்பு, நெல்லிமுள்ளி, சிவதை, பூலாக்கிழங்கு, அவுரிவேர், பேய்ப்புடல், பற்பாடகம், மருதம்பட்டை, இலுப்பைப்பூ, விஷ்ணுகிராந்தி, அதிமதுரம் வகைக்குப்பலம் 1, காட்டாத்திப்பூ பலம் 16, திராக்ஷைப்பழம் பலம் 20, நன்றாய் மசிய இடித்துப் பழய பாண்டத்திலிட்டு, 8 - படி ஜலம் விட்டுச் சர்க்கரை பலம் 100, தேன் பலம் 50, கூட்டி, மேல்மூடிச் சீலமண்செய்து 1 - மாதம்வைக்க ஆஸவம் சித்தமாகும். இதனால்—பாலரோகங்கள் எல்லாந்தீரும், பலம், புஷ்டி, தீபனம் உண்டாகும். மேலும், மிருத்யுவியாதியைநீக்கி உத்ஸாகத்தைத் தரும்.



## அஹிபேனாஸவம்.

இலுப்பைக்கள்ளு 1 - துலாம், க்ருதபாண்டத்திலிட்டு அதில், அபின் 1 - குடவம், கோரைக்கிழங்கு, ஜாதிக்காய், வெட்பாலையரிசி, ஏலம் வகைக்குப் பலம் 1, சூரணித்துக்கூட்டி மூடிச் சீலைமண்செய்து, 1 - மாதம் சென்றபின் வடிகட்டி 1 - முதல் 5 - துளிகள்வரையில் ஜலத்திற்சேர்த்துக்கொள்ள அதி உக்ரமான அதிசாரம், க்ரஹணீ, விஷூசி தீரும்.

## உசீராஸவம்.

விலாமிச்சம்வேர், வெட்டிவேர், அல்லிக்கிழங்கு, பெருங்குமிழ், நீலோத்பலம், ஞாழல், தாமரைக்கிழங்கு, லோத்திரப்பட்டை, மஞ்சிஷ்டி, சிறுகாஞ்சொறி, வட்டத்திருப்பி, நிலவேம்பு, ஆல்ம்பட்டை, அத்திப்பட்டை, பூலாக்கிழங்கு, பற்பாடகம், பேய்ப்புடல், வெண்தாமரை, சிறுநாகப்பூ, நாவற்பட்டை அல்லது பிசின், இலவம்பிசின் இவைகள் பிரத்யேகம் ஒவ்வோர் பலம் இடித்துச் சூரணித்து, திராக்ஷைப்பழம் பலம் 20, காட்டாத்திப்பூ பலம்-16 இவைகளையும் இடித்து, 2-துரோண ஜலத்திற்போட்டு அதில், சர்க்கரை பலம் 100, தேன் பலம் 50, சேர்த்து, மிளகு, ஜடாமாஞ்சி இவைகளால் புகைத்த மட்பாண்டத்திற்பெய்து மேல்மூடிச் சீலமண்செய்து 1 - மாதம் வைத்திருந்து பிறகு, தெளிந்தெடுத்து வடிகட்டி யுட்கொண்டுவர—ரக்தபித்தம், பிரமேகம், தாபம், தாகம், பாண்டு, சோபை, அருசி, குஷ்டம், மூலம் தீரும்.

வட்டத்திருப்பியையும் வெட்டிவேரையும் நீக்கிச்செய்யும் முறை சுதநிக்ரஹத்தில் உள்ளது.

## * கதிராஸவம்.

கருங்காலிக்கட்டை 1 - துலாம் பொடித்து, 4 - துரோண ஜலத்தில் போட்டுக்காய்ச்சி, 1 - துரோணகஷாயமாய் வடித்து, அதில் தேன் 50 - பலம் சேர்த்து இறுத்து, வஸ்திரகாயஞ்

* இதனையும், மற்றுஞ் சிலவற்றையும் முதனூலை யனுசரித்து ஆஸவமென வரைந்திருப்பினும், அரிஷ்டமெனக்கூறுதல் நியமம்.

செய்த த்ரிகடு, திரிபலை, ஊமத்தைவேர்ப்பட்டை, கார்போகரிசி, சீந்திற்கொடி, புரசம்பிசின், வாய்விளங்கம், பேரீச்சங்காய் வகைக்குப் பலம் - 1, தாதகிமலர் பலம் - 16 சேர்த்து, தினந்தினம் கலக்கி 16-நாள் கழித்து, மறுபடியும் தேன் - 50 பலம் கூட்டி, மேல்மூடிச்சீலைமண்செய்து 1 - மாதம் வைத்துப் பின் வடிகட்டிக் கஸ்தூரி 1 - மாஷமும், பச்சைக் கற்பூரம் 2 - மாஷமும் பொடித்துச்சேர்த்து யுபயோகிக்க—குஷ்டம், மேகம் விரணம், தோலைப்பற்றிய ரோகங்களெல்லாந் தீரும்.

(வேறு.)

கருங்காலி பலம் 50, தேவதாரு பலம் 50, திரிபலை பலம் 20, மரமஞ்சள் பலம் 25, கார்போகரிசி பலம் 12, இவைகளை இடித்துப் பொடித்து, 8 - துரோண ஜலம்விட்டுக் காய்ச்சி, 1 - துரோணமாய் சுண்டவைத்து வடிகட்டி யதில் தேன் பலம் 200, சர்க்கரை பலம் 100, சேர்த்துக் காட்டாத்திப்பூ பலம் 20, திப்பிலி பலம் 4, தக்கோலம், லவங்கம், ஏலம், ஜாதிக்காய், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, மிளகு வகைக்குப் பலம் - 1 சூரணித்துப்போட்டு, மேல்மூடிச் சீலைமண்ணையும் செய்து 1 - மாதம் அசையாமல் வைத்துப் பின் வடிகட்டிக் கொள்ளவும். இதனை தேகபலத்திற்கும், வியாதிபலத்திற்கும் தக்கவாறு உட்கொள்ள — குஷ்டம், ஹ்ருத்ரோகம், பாண்டுரோகமும் காசம், கிருமி, கிரந்தி, அற்புதம், குன்மம், ப்லீஹம் தீரும். சில நூற்களில் மிளகைநீக்கிக் கூறியுள்ளது.

(வேறு)

கருங்காலிக்கியாழம் 1 - த்ரோணம், தேன் பலம் 200, இவ்விரண்டையும் பழகிய மட்பாண்டத்திலிட்டு, அதில் காட்டாத்திப்பூ பலம்-8, சீந்திற்கொடி, வாய்விளங்கம், கார்போகரிசி, தேற்றான்விதை, திரிபலை, திரிகடுகு, லவங்கப்பட்டை, மஞ்சள், இவைகள் வகைக்குப் பலம் 1, சூரணித்துக்கூட்டி, மூடிச் சீலைமண்செய்து 1 - மாதம் வைத்திருந்து பிறகு, வடிகட்டிக் கொண்டு காலைதோறும் உட்கொண்டுவர—சிரசினுண்டாகும்



குஷ்டம், மேகம், பகந்தரம், மூலம், சோபை, காசம், சுவாசம் இவைகள் தீரும். தேகம் சுவர்ணகாந்தியை யடையும்.

கர்ஜூராஸவம்.

விதைபோக்கிய கர்ஜூரம் பலம் 40, இதை நசுக்கி 8 - படி ஜலத்திலிட்டு சுண்டக்காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிய கஷாயம் படி 1 - ல், பழையவெல்லம் பலம் 40, கூட்டிக் கரைத்து, லவகரத்தைச்சூரணம் பலம் 4, காட்டாத்திப்பூ தூள் பலம் 4, போட்டுக் கலக்கிமூடி மண்சீலைசெய்து 1 - பக்ஷம் பூமியில்புதைத்துவைத்துப் பின்பு எடுத்து வடிகட்டிச் சேவித்துவர—க்ஷயம், பிரமேகம், பாண்டு, காமாலை, சோகை, க்ரஹணி, குன்மம், மூலம் இவைகளெல்லாம் நிவர்த்தியாகும்.

குக்குல்வாஸவம்.

கடுக்காய் 100, தான்றிக்காய் 100, நெல்லிக்காய் பலம் 16, மைசாக்ஷி பலம் 16, லவங்கப்பட்டை, ஏலம், திப்பிலி, மூலம், செவ்வியம், சித்ரமூலம், சீரகம், தாளீசபத்திரி, த்ரிகடு, கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, குமிழ் வகைக்குப் பலம் - 4 இடித்துத்தூளாக்கி, 1 - துரோணஜலத்திலிட்டு, $\frac{1}{4}$ - துரோணமாய் சுண்டக்காய்ச்சி வடிகட்டி, அதில் காட்டாத்திப்பூ 1-பிரஸ்தம், வெல்லம் பலம் 200, திராக்ஷைப்பழம் பலம் 10, மாதுளம்பழம் பலம்10, ஒன்றாய்ச்சேர்த்துக் கிருதபாண்டத்திலிட்டுமூடிச் சீலைசெய்து நிறம், வாசனை, ருசி உண்டானபின், கருப்பஞ்சாறு $\frac{1}{4}$ - பாகங்கூட்டி மூடி, மறுபடியும் 6 - மாதம் வைத்திருந்து வடிகட்டி ஆகாரத்திற்கு முன்பின் இடையில் உபயோகிக்க—உதரரோகம், ப்லீகை ஊருஸ்தம்பம், பகந்தரம், கிருமி, குஷ்டம், பிரமேகம், சுவாசகாசம், சோபை, காமாலை, அக்கினிமந்தம் தீரும்.

குடஜாஸவம்.

நாயுருவி வேர் பலம் 100, திராக்ஷைப் பலம் 50, இலுப்பைப்பூ பலம் 10, குமிழ் பலம் 10, இவைகளை இடித்து, [illegible] - துரோணஜலத்திலிட்டு நாலிலொன்றாய் சுண்டக்காய்ச்சி வடி

கட்டி, வெல்லம்பலம் 300, கரைத்துக் காட்டாத்திப்பூபலம்20, ஜமத்தனிஜ பலம் 4, த்ரிசடு, தக்கோலம், ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஜாதிக்காய், லவங்கம் வகைக்குப் பலம் 1 பொடித்துப்போட்டு, மூடிச் சீலைசெய்து 1 - மாதம் வைத்தெடுத்து வடிகட்டி உபயோகிக்க—தோஷஜ்வரம், ஸந்நிபாதஜ்வரம் முதலான சகல கோரமான ஜ்வரங்களும் தீரும்.

### குமார்யாஸவம்.

ஒரு துரோணம் கற்றாழைச்சாற்றை பழகியபாண்டத்தி விட்டு அதில் தேன் பலம் 50 கலந்து, சுத்திசெய்த அரப்பொடி பலம் 50, திரிகடுகு, சாதுர்ஜாதம், லவங்கம், மோடி, விடங்கம், சித்ரமூலம், செவ்வியம், ஆனைத்திப்பிலி, மல்லி, பாக்கு, ரோகணி, திரிபலை, முத்தம், அரத்தை, தேவதாரு, இருமஞ்சள், அதிமதுரம், தந்திமூலம், தாமரைக்கிழங்குசிற்றுமுட்டி, பேராமுட்டி, பூனைக்காலிவிதை, கண்டங்கத்திரிவேர், இருகாஞ்சொறிவேர், பூனைக்காலிவேர், சதகுப்பை, மருள்கிழங்கு, ஹிங்குபத்திரி வகைக்குப்பலம்-½, காட்டாத்திப்பூபலம்-8 பொடித்துப்போட்டுக் கலக்கி மேல்மூடிச் சீலைசெய்து, போதுமான நாள்வரையில் வைத்திருந்து ஆஸவத்தை முடித்துக் கொள்ளவும். தேக தேச கால வியாதி பலாபலத்தை அனுசரித்து 1-பலமுதல் 2-பலம் வரையில் உட்கொண்டுவர—பலம், பசி, காந்தி அதிகரிக்கும். பரிணாமசூலை, உதரரோகம், மேகம், க்ஷயம், அபஸ்மாரம், அஸ்மரி, கிரிச்சரம், கிருமி, இரத்தபித்தம், சுக்கிலதோஷம் நிவர்த்தியாகும்.

### (வேறு.)

குமரிச்சாறு பலம் - 50, வெல்லம் பலம் - 25, சாதுர்ஜாதம், லவங்கம், சைந்தவம், மஞ்சள்த்வயம், நந்தியாவட்டை, திப்பிலி, மிளகு, காட்டாத்திப்பூ, வகைக்குப் பலம்-1, கடுக்காய்த்தோல் பலம் - 2, அபிஞ்சில், வசம்பு, ஜாதிபத்திரி, விடங்கம் வகைக்குப் பலம் - 1, பொடித்துச்சேர்த்து, சுத்தமான பாண்டத்திலிட்டு மூடிச் சீலைமண்செய்து 1 - பக்ஷம்



வைக்கவும். இதனை ½ - பலம் வீதம் சாப்பிட—குன்மம், உதாவர்த்தம், பார்ஸ்வசூலை, வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், மந்தாக்னி, விக்கல், சுவாஸகாசம், கபக்ஷயம், ப்ளீஹம், யக்ருத், வீக்கம் தீரும்.

### சந்தனாஸவம்.

சந்தனத்தூள், விலாமிச்சம்வேர், கோரைக்கிழங்கு, நெய்தற்கிழங்கு, பெருங்குமிழ், ஞாழல், தாமரைக்கிழங்கு, ரக்தசந்தனம், லோத்திரப்பட்டை, மஞ்சிஷ்டி, வட்டத்திருப்பி, நிலவேம்பு, ஆலம்பட்டை, அமுக்கிறாக்கிழங்கு, பற்பாடகம், பூலாக்கிழங்கு, அதிமதுரம், சிற்றரத்தை, பேய்ப்புடல், மாம்பட்டை, இலவம்பிசின், தேவகாஞ்சனம் இவைகள் வகைக்குப் பலம்-1, காட்டாத்திப்பூ பலம்-16, கிராக்ஷாப்பழம் பலம்-20, பறங்கிப்பட்டை பலம் - 10 இடித்துப் பாண்டத்திலிட்டு 2 - துரோணஜலம் விட்டு, சர்க்கரைப் பலம் - 100, தேன் பலம்-50 சேர்த்து, மேல்மூடிச் சீலைமண்செய்து 1 - மாதம் கழித்து வடிகட்டி யுபயோகிக்க—வெட்டை, வெள்ளை, பெரும்பாடு தீரும். பலம்கொடுக்கும். உஷ்ணம், தாபம், தாகம் தணியும்.

### சிசிரபானகம்.

சர்க்கரை பலம் 2, அரைத்த சந்தனம் தோலா 1, எலுமிச்சம் பழச்சாறு பலம் 1, சதாவரிச்சாறு பலம் 1, தேன் தோலா ½ முதல் வேண்டிய அளவு, ஜலம் பலம் 8 ஒன்றாய்க் கூட்டி வெயிலில்வைத்து அடிக்கடி கலக்கிப் பக்குவப்படுத்தி உபயோகித்துவர—சூரிய வெப்பத்தினால் உண்டாகும் தாபம், தாகம், மூர்ச்சை, மித்யாஹார விஹாரங்களால் உண்டாகும் அபஸ்மாராதி, மனோவிகாரங்கள் தீரும். பலமுமுண்டாகும்.

### சவிகாஸவம்.

செவ்வியம் பலம் 50, சித்ரமூலம் பலம் 25, பாஞ்சிகா, புஷ்கரமூலம், மரமஞ்சள், கொட்டைக்கரந்தை, பூலாக்கிழங்கு, பேய்ப்புடல், திரிபலை, ஓமம், வெட்பாலைப்பட்டை, மல்லி, பேய்த்துமட்டி, சிற்றரத்தை, தந்திமூலம், வகைக்குப்பலம் 10, விடங்கம், கனம், மஞ்சிஷ்டி, தேவதாரு, திரிகடுகு வகைக்குப்

பலம் 5 இவைகளைப் பொடித்து, 8 - துரோண ஜலத்திலிட்டுக் காய்ச்சி, 1 - துரோணமாக வடித்து, அதில் வெல்லம் பலம் 300, காட்டாத்திப்பூ பலம் 20, சாதுர்ஜாதம் பலம் 8, லவங்கம், திரிகடுகு, அழிஞ்சில் வகைக்குப் பலம் 1 பொடித்துக் கூட்டி, நெய்ப்பாண்டத்திலிட்டுமூடி, 1 - மாதம் வைத்திருந்து பின் வடிகட்டி ஒன்றுமுதல் நாலுபலம் வரையில் காலையில் மாத்திரம் உட்கொள்ள—குன்மம் 8, பிரமேகம் 20, க்ஷயம், காசம், அஷ்டீலா, வாதசோணிதம், பிரதிஸ்யாயம், வயிற்றுப் பொருமல் தீரும்.

### தேவதார்வாஸவம்.

தேவதாரு பலம் 50, ஆடாதோடை பலம் 20. வெட்பாலைப்பட்டை, தந்திமூலம், மஞ்சிஷ்டி, கிரந்திதகரம், இருமஞ்சன், சிற்றரத்தை, கோரைக்கிழங்கு, வாகைப்பட்டை, கருங்காலிக்கட்டை, மருதம்பட்டை, வாய்விளங்கம் வகைக்குப் பலம் - 10, சீந்திற்கொடி, சித்திரமூலம், சந்தனத்தூள், ஓமம், கடகரோஹணி, வெட்பாலையரிசி வகைக்குப் பலம் - 5 நன்கு இடித்து, 8 - துரோணஜலத்திலிட்டு எரித்து. 1 - துரோண கஷாயமாய் வடித்து, அத்துடன் தேன் பலம்-300, காட்டாத்திப்பூ பலம் - 16. திரிஜாதம் பலம்-4, திரிகடுகு பலம் - 2, கேசரம் பலம்-2. ப்ரியங்கு பலம்-4 பொடித்துக் கூட்டி, க்ருதபாண்டத்திலிட்டு சீலைமண்செய்து, 1 - மாதம் கழித்து வடிகட்டி உபயோகித்துவர—பிரமேகம், கிருச்சிரம், வாதரோகம், க்ரஹணீ, மூலம் முதலிய விகாரங்கள் தீரும். 5 - பலம் சேர்க்கும்படி சொன்ன 6-சரக்குகளை, 8 - பலம் சேர்க்கும்படி சில நூற்களில் கூறியுள்ளது.

### த்ராயமாணாஸவம்.

* தாராப்பூண்டு, சிறுகுமிழ், தந்திமூலம், புஷ்கரமூலம், கண்டங்கத்திரி, காஞ்சொறி, அஞ்சனக்கல், ஆடாதோடை, திப்பிலி

---

* தாராப்பூண்டுக்குப்பதில் - கழற்சிவேர்ப்பட்டை சேர்ப்பது உத்தமமெனத் தோன்றுகிறது.



மூலம், நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், சிறுதேக்கு, மாசக்காய், ஏலவாலுகம், கடுக்காய், பூலாங்கிழங்கு, தும்மட்டி, இவைகள் வகைக்கு 8-பலமாக இறுத்திடித்து, 4- துரோண நீரிலிட்டு 1 - துரோணமாய் காய்ச்சி வடிகட்டி அதில், தேன் பலம் 300- கூட்டி, காட்டாத்திப்பூ பலம் 20, சிவதைவேர் பலம் 4, சாதுர்ஜாதம் பலம் - 2, பொடித்துப்போட்டுமூடி மண்சீலைசெய்து போதுமான காலவரையில் வைத்துப் பின்பெடுத்து வடிகட்டிக்கொள்ளவும். இதனால்—ஆமவாதம் ஹிருத்ரோகம், குல்மம், ஸ்வரஸகாஸம், பாண்டு, மூலம், ஜ்வரம், திரிதோஷம் தீரும்.

### த்ரிபலாஸவம்.

திரிபலைத்தோல், சித்ரமூலவேர்ப்பட்டை, அரிசித்திப்பிலி, ஓமம், வாய்விளங்கம், அரப்பொடி வகைக்குப்பலம்-4 பொடித்து, துரோணப்பிரமாண ஜலத்திலிட்டு அத்துடன் பழையவெல்லம் 2 - தூக்கு, தேன் 1 - சேர்கூட்டி வடிகட்டி யுட்கொண்டுவர—சோகை, பாண்டு; காமாலை, வீக்கம் தீரும்.

### நாரிகேளாஸவம்.

இளநீர் படி 4, கருப்பஞ்சாறு படி 2, இலவம்பட்டைச்சாறு படி 1, தசமூலக்கியாழம் படி 1, இவைகளைப் பழைய க்ருதபாண்டத்திலிட்டுக் காட்டாத்திப்பூ பலம் 16, சாதுர்ஜாதம் வகைக்குப் பலம் 4,, கிரந்திதகரம், சந்தனம், கிராம்பு, பெருநாகப்பூ வகைக்குப் பலம் 1, கஸ்தூரி 1 - சாணமெடை பொடித்துத்தூவி மூடிச்சீலைமண்செய்து 1 - மாதம் வைத்திருந்து வடிகட்டி யுபயோகிக்க—நரை, திரை மாறி, ஷண்டத்துவம் நீங்கி, யௌவனம் அழகு ஆயுள்விர்த்தி போகசக்தி உண்டாகும்.

### பஞ்சமூத்ராஸவம்.

ஆடு, பசு, மான், கழுதை, ஒட்டை இவ்வைந்தின் மூத்திரம் வகைக்கு $\frac{3}{4}$-படி, வசம்பு அரைத்துப்பூசிய பாண்டத்தில் ஊற்றி, அதில் சுண்டு, ஏலம், லவங்கம், வாய்விளங்கம் வகை

க்கு $\frac{1}{2}$ - பலம், திரிகடுகு, கடுக்காய், வகைக்கு 1-பலம் பொடித்துக்கூட்டி, மூடிச்சீலைசெய்து, சமையலடுப்பின்கீழ்ப் புதைத்து வைத்து, அதன்மேரில் 7 - நாள் சமையல் செய்ய இவ்வாஸவம் முற்றுப்பெறும். இதனால்—மஹோதரம், மூடவாதம் கபம் நாசத்தை யடையும்.

### பத்ராங்காஸவம்.

லவங்கப்பட்டை, கருங்காலிக்கட்டை, ஆடாதோடைவேர், முள்ளிலவம்பூ, சிற்றாமுட்டி, செங்கொட்டை, இருவேரி, செம்பருத்திப்பூ, மாம்பருப்பு, மரமஞ்சள், நிலவேம்பு, வில்வவேர், வெட்டிவேர், கிராம்பு, குங்குமப்பூ, சன்னலவங்கப்பட்டை, ரஸாஞ்ஜனம், அரப்பொடி இவைகள் வகைக்குப்பலம் 1, காட்டாத்திப்பூ பலம் 16, திராக்ஷை பலம் 20, தேன் பலம் 50, வெல்லம் பலம் 100, ஜலம் படி 8, இவைகளை விதிப்படி கூட்டி மட்பாண்டத்திலிட்டுமூடிச் சீலைசெய்து 1 - மாதம் சென்றபின்வடிகட்டி யுபயோகித்துவர—பிரதரரோகம், பாண்டு, சோபை, ஜ்வரம், அரோசகம், அக்னிமந்தம் தீரும்.

### பிப்பல்யாஸவம்.

அரிசித்திப்பிலி, மிளகு, செவ்வியம், கறிமஞ்சள், சித்திரமூலம், கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், கடுகு, லோத்திரப்பட்டை, வட்டத்திருப்பி, நெல்லிமுள்ளி, ஏலவாலுகம், (எலம் வெட்டிவேர்) விலாமிச்சம்வேர், சந்தனம், கோஷ்டம், லவங்கம், கிரந்திதகரம், ஜடாமாஞ்சில், திரிஜாதம், ப்ரியங்கு, சிறுநாகப்பூ, இவைகள் வகைக்குப் பலம் $\frac{1}{4}$ - இடித்துச் சூரணஞ்செய்து, 2-துரோணஜலத்திற் போட்டு, வெல்லம் 300 - பலம், தாதகி புஷ்பம் 10 - பலம், திராக்ஷைப்பழம் 60 - பலம் இவைகளையுங் கூட்டி, மட்பாண்டத்திலிட்டுமூடிப் பக்குவமானபின் வடிகட்டி, ஜீரணசக்திக் கேற்றவாறு கொடுத்துவர—க்ஷயம், குன்மம், மஹோதரம், தேகமெலிவு, க்ரஹணீ, பாண்டு, மூலம், இவைகளைச் சீக்கிரத்தில் நாசஞ்செய்யும்.



### பீஜகாஸவம்.

வெட்டாலைப்பரிசி பலம் 16, திரிபலை பலம் 20, திராக்ஷை பலம் 5, கொம்பரக்கு பலம் 7 இவைகளை இருதுரோணஜலத்திலிட்டு கால் பாகமாய் சுண்டினபின் வடிகட்டிச் சர்க்கரை பலம் 100, தேன் பலம் 16 கூட்டித் திரிகடுகு, நாகணம், விலாமிச்சம்வேர், கிருமிக்னம், ஏலவாலுகம், அதிமதுரம், கோஷ்டம் இவைகளை வகைக்குப் பலம் $\frac{1}{4}$ நிறுத்து இடித்துச் சூரணித்துச்சேர்த்து மேல்மூடிச் சீலைசெய்து யவதான்யத்தில் 10 - நாள் கிரீஷ்மகாலத்தில் வைத்தெடுத்துக் கொள்ளவும். சிசிரகாலத்திலானால் 2 - நாள் தான்யபுடம் போதுமானது. இதனால்—க்ரஹணி, பாண்டு, மூலம், சோபை, குன்மம், குஷ்டம், கல்லடைப்பு, மூத்திரக்கிரிச்சிரம், காமாலை, லக்கியாதம் தீரும்.

### புனர்னவாஸவம்.

புனர்னவம், திரிகடுகு, திரிபலை, மரமஞ்சள், பெருநெருஞ்சி, கண்டங்கத்திரி, ஆனைமுள்ளி, ஆடாதோடைவேர், முத்துக்கொட்டைவேர், வேப்பம்பட்டை, சீந்தில்தண்டு, சிறுகாஞ்சொறி, பேய்ப்புடல், (உலர்ந்த) முள்ளங்கி, கடுகரோகணி, ஆனைத்திப்பிலி வகைக்குப் பலம் 1, காட்டாத்திப்பூ பலம் 16, திராக்ஷை பலம் 20 இவைகளை நன்றாக இடித்துப் பழகிய மட்பாண்டத்திலிட்டு, அத்துடன் சர்க்கரை 1 - துலாம், தேன் $\frac{1}{2}$ - துலாம் கலந்து, 2 - துரோணஜலம்விட்டு மூடி, வாய்பந்தனஞ்செய்து, 1 - மாதம் வைத்தெடுத்து வடிகட்டி யுட்கொண்டுவர—வீக்கம், மஹோதரம், ப்லீஹை, யக்ருத், குன்மம், ஆமவாதம், மூத்திரபீடை, ஜ்வரம் முதலிய பற்பல பிணிகள்போம்.

(வேறு.)

வெள்ளைச்சாரணை, மூக்குறட்டை, வட்டத்திருப்பி, தந்திமூலம், சீந்திற்கொடி, சித்ரமூலம், நிதிக்திகா, திப்பிலி, திரிபலை வகைக்குப் பலம் 2, இடித்துத் தூளாக்கி 4-துரோண ஜலம்விட்டுக் காய்ச்சி 1 - துரோணமாய் சுண்டவைத்து வடிகட்டி புராண வெல்லம் பலம் 200, மது 1-பிரஸ்தம் சேர்த்து

சந்தனப்புகையை யூட்டி, நெய், தேன் தடவிய க்ருதபாண்டத்திலிட்டு மூடிச் சீலைசெய்து 1 - மாதம் கழித்துப் பிரித்து, ஊமத்தன்வேர்ப்பட்டை, ஏலம், வெட்டிவேர், மிளகு, லவங்கப்பத்திரி, வகைக்குப் பலம் ½, பொடித்துப்போட்டு மறுபடியும் மூடி சீலைமண்செய்து, 1 - மாதம் வைத்திருந்து பின்பு வடிகட்டி வியாதி பலத்திற்கேற்ற அளவு கொள்ள—ஹ்ருத்ரோகம், பாண்டுரோகம், வீக்கம், ப்லீஹம், ப்ரமை, அருசி, க்ரஹணீ, குல்மம், மூலம், மேகம், பகந்தரம், காசம், ஸ்வாஸம், தினவு, குஷ்டம், வாதரோகம் தீரும்.

### புஷ்கரமூலாஸவம்.

புஷ்கரமூலம் பலம் 100, சிறுகாஞ்சொறி பலம் 50, மல்லி பலம் 25, திரிகடுகு பலம் 20, மஞ்சிஷ்டி, கோஷ்டம், மிளகு, விளாம்பிசின், தேவதாரு, லோத்திரப்பட்டை, விடங்கம், செவியம், திப்பிலிமூலம், விலாமிச்சம்வேர், குமிழம்பழம், சுக்கு, சிற்றரத்தை, கண்டுபாரங்கி வகைக்குப் பலம் 2 இவைகளைத் தூளாக்கி கடத்திலிட்டு 4 - துரோண ஜலத்தைவிட்டு ¼ பாகமாய் காய்ச்சி வடிகட்டி, வெல்லம் பலம் 300, தாதகிபுஷ்பம் பலம் 20, மிளகு, சிறுநாகமலர், சிவதை, திரிஜாதம் வகைக்குப் பலம் 1, திப்பிலி பலம் 4 பொடித்துப்போட்டு, கலக்கி மேல்மூடிச் சீலைசெய்து 1- மாதம் வைத்திருந்து பின்பு வடிகட்டி விதிப்பிரகாரம் சாப்பிட்டுவர—க்ஷயம், காஸம், சோபை, குல்மம், பகந்தரம், அபஸ்மாரம் தீரும்.

### ப்ருங்கராஜாஸவம்.

கரிசலாங்கண்ணிச்சாறு படி 4 - ல் வெல்லம் பலம் 200 கரைத்து கடுக்காய்த்தோல் சூரணம் அரைபடி - (பலம் 8) திப்பிலி, ஜாதிக்காய், லவங்கம், சாதுர்ஜாதம், வகைக்குப் பலம் 2, பொடித்துத் தூவி, மூடிச் சீலைசெய்து 1 - மாதம் வைத்திருந்து பின் வடிகட்டி உபயோகிக்க—பஞ்சகாஸம் தீரும், இளைத்ததேகம் புஷ்டியாகும். காமம், பலம் விர்த்தியாகும், தாதுக்ஷயம், மலடு நீங்கும். இரத்தசக்தியுமுண்டாகும்.



### ப்ருஹத்சுக்ரஸந்தானம்.

கழுநீர் படி 1, காடி படி 3, தயிர்த்தண்ணீர் படி ½, காடியின் அடிவண்டல் படி ¼, வெல்லம் சேர் 2, தோல் போக்கிப் பொடிப்பொடியாய் அரிந்த இஞ்சி சேர் 2, இந்துப்பு, சீரகம், அரிசித்திப்பிலி, மிளகு, மஞ்சள் இவைகள் வகைக்குப் பலம் 2 சூரணித்து ஒன்றுபடக்கூட்டி க்ருதபாண்டத்திலிட்டு மூடிச்சீலைசெய்து தான்யராசியில் லகுசுக்ரசந்தானத்தில் கூறியபடியாகப்படி வைத்தெடுத்து வடிகட்டி சாதுர்ஜாதம் வகைக்குப்பலம் ½ - பொடித்துப்போட்டு உட்கொள்ள—வாததோஷம், கபதோஷம், சூலை, குல்மம், ஆமவாதம் இவைகளைக்கண்டிக்கும்.

### மத்வாஸவம்.

கருங்காலி பலம் 8, தேவதாரு பலம் 8 பொடித்து, 8 - மடங்கு நீரிலிட்டு நாலிலொன்றாய் சுண்டவைத்து வடிகட்டி, தேன் பலம் 10, அப்பொடி பலம் 8, திரிபலை, திரிஜாதம், திப்பிலிமூலம், மிளகு, ஊமத்தனிலை வகைக்குப்பலம் ¼ கற்கண்டு பலம் 16, பொடித்துப் போட்டு இருப்புப்பாத்திரத்திலிட்டு மூடிச் சீலைசெய்து 1 - மாதம் வைத்தெடுத்து வடிகட்டி உபயோகிக்க—இரத்த சுத்தியும், இரத்த விர்த்தியுமுண்டாகும்.

### மஸ்த்வாஸவம்.

ததிமஸ்து 1 - துரோணம், வெல்லம் 1 - துலாம் இவைகளை வசம்பும், கோஷ்டமும் அரைத்துப்பூசின மட்பாண்டத்திலிட்டு, திப்பிலி 1 - பிரஸ்தம், திரிபலை 3 - பிரஸ்தம், விடங்கம், மரிசம், பெருங்குமிழ், திராக்ஷை, வெட்பாலையரிசி, மிளகு இவை வகைக்கு 1 - குடவம், பஞ்சமூலம், தந்திமூலம், சித்ரமூலம், வசம்பு, பல்லாதகி வகைக்குப்பலம் ½ சூரணித்துக் கூட்டி மூடிச்சீலைசெய்து 1-மாதம் தான்யபுடம் வைத்தபிறகு வடிகட்டி கிரமமாய் உபயோகிக்க—பாண்டு, உதரரோகம், க்ரஹணீ, மூலம், பகந்தரம், ப்லீஹம் சோபை, காஸம், ஸ்வாஸரோகம், பாதிரியரோகம் தீரும். அக்னி தீபனம் அதிகரிக்கும்.

## மாசிகாஸவம்.

மாசக்காய் 50, பொடித்து துரோணஜலத்திலிட்டு ¼-பாகமாய்க் கண்டினபின் வடிகட்டி வெல்லம் பலம் 200, கரைத்து க்ருதபாண்டத்திலிட்டு, அதில் விடங்கம், திப்பிலி, த்வயம், சாதுர்ஜாதம், மிளகு வகைக்குப் பலம் 1, சூரணித்துக்கூட்டி மூடிச் சீலைசெய்து போதுமான நாள்பரியந்தம் வைத்திருந்தபின் வடிகட்டி உபயோகிக்க—காஸஸ்வாஸக்ஷயம், க்ஷாமயம் தீரும்.

## ம்ருகமதாஸவம்.

ம்ருதஸஞ்ஜீவினிஸுரா 50-பலம், தேன் 25-பலம், ஜலம் 25-பலம், கஸ்தூரி 1 - குடவம், மிளகு, லவங்கம், ஜாதிக்காய், திப்பிலி, லவங்கப்பட்டை, வகைக்குப்பலம் 2, பொடித்துச் சேர்த்து பழகிய பாண்டத்திலிட்டுமூடிச் சீலைமண்செய்து 1 - மாதங்கழித்து வடிகட்டி உபயோகிக்க—த்ரிதோஷம், ஜ்வரம், ஸந்நி, விக்கல், விஷூசி தீரும். ஹ்ருதயம், ஸுவாஸாலயம், இவைகளைப்பலப்படுத்தும்—லவங்காதிற்குபதில் இதைப்பசை சேர்த்துச் செய்வதுமுண்டு.

## யோகராஜாஸவம்.

திராக்ஷைப்பழம் பலம் - 10, கடுக்காய் பலம்-4 இலந்தை ஆடாதோடை மருதம்பட்டை, தேற்றான்விதை, தேவதாரு, லவங்கம், திப்பிலிமூலம், சித்திரமூலம், லோத்திரப்பட்டை, காட்டாத்திப்பூ பலம் 1, இடித்துப்பாண்டத்திலிட்டு 8-மடங்கு ஜலம்விட்டு பாதியாய் சுண்டினபின் வடிகட்டின கஷாயத்துடன் பாக்குக்கஷாயம் 1-பலம், மஞ்சிஷ்டிக்கஷாயம் 2 - பலம் கூட்டி அதில் சர்க்கரை பலம் 10, வெல்லம் பலம் 10, கரைத்து த்ரிகடு, பஞ்சவாசம் சிறுநாகப்பூ லவங்கப்பட்டை, ஜடாமாஞ்சில், செவ்வியம், கோரைக்கிழங்கு, கோஷ்டம், அருகங்கட்டை, கள்ளிக்கட்டை, கடுகுரோகணி வகைக்குப் பலம் 1, பொடித்துக் கற்கமாகத் தூவித்துழாவி கற்பூரவாசனைக்கட்டிய மட்பாத்திரத்திலிட்டுமூடிச் சீலைசெய்து தான்யத்தில் உஷ்ணகா



லமாகில் 3-நாளும், சீதளகாலமாகில் 7 - நாளும் புடம்வைத்துப் பிறகு, வடிகட்டி பலம்-1 வீதம் சாப்பிட—வாதபித்தம், ரக்தபித்தம், தீரும். தீபனம் அதிகரிக்கும்.

## ரோஹிதகாஸவம்.

செம்மரம் பலம் - 100 சூரணித்து, 4 - துரோணஜலத்திலிட்டு, 1 - துரோணமாய்க்காய்ச்சி இறுத்து, அதில் வெல்லம் பலம் 200, காட்டாத்திப்பூ பலம்-16 பஞ்சகோலம், திரிஜாதம், திரிபலை, வகைக்குப்பலம்-1 சூரணித்துச்சேர்த்து, 1-மாதம் வரையில் மூடிவைத்து, பின் வடிகட்டி புட்கொண்டுவர—மூலம், க்ரஹணி, பாண்டு, ஹ்ருத்ரோகம், ப்லீஹம், குன்மம், மஹோதரம், குஷ்டம், அருசி முதலியவைகள் நிவர்த்தியாகும்.

திரிஜாதத்தை நீக்கியும், பின்னும் அதற்குபதில் திரிகடுகைக்கூட்டியுஞ் செய்யும்படி வேறுமுறைகள் கூறுகின்றன.

## லகுசுக்ரஸந்தானம்.

வெல்லம் பங்கு - 1, தேன் பங்கு - 2, காடி பங்கு - 4, தயிர்ஜலம் பங்கு - 8, ஒன்றாய்க்கலந்து மட்பாண்டத்திலிட்டு மூடிச்சீலைசெய்து தான்யபுடம்வைக்கவும். வெயில்காலத்தில் 3-நாளும், பனிக்காலத்தில் 4 - நாளும், மழைகாலத்தில் 6 - நாளும் புடத்திலிருத்தல்வேண்டும் இது—அரோசகம், அக்னிமந்தம் க்ரஹணி அதிஸாரம், மூலவாயு, சீதபேதி முதலியவைகளை நன்கு கண்டிக்கும்.

## லவங்காஸவம்.

லவங்கம், திப்பிலி, அரப்பொடி, மிளகு, ஏலவாலுகம் வகைக்குப்பலம் 2, பொடிசெய்து 16 - படி ஜலத்திலிட்டுக் காய்ச்சி 4 - படியாய் வடிகட்டிக்கொண்டு, வெல்லம் பலம் - 20 சேர்த்து பழகிய பாண்டத்திலிட்டுமூடிச் சீலைசெய்து 1-பக்ஷம் கழித்து வடிகட்டி உபயோகிக்க—குதரோகம், க்ரஹணி ப்லீஹம், குல்மம், உதரரோகம், சோபை, பாண்டு, காமாலை, ஹ்ருத்ரோகம் தீரும். பலம் தீபனம் அதிகரிக்கும்.

## லோத்ராஸவம். (மத்வாரிஷ்டம்.)

லோத்ரம், பூலாக்கிழங்கு, புஷ்கரமூலம், ஏலம், பெருங்குரும்பை, வாய்விளங்கம், திரிபலை, ஓமம், செவியம், ப்ரியங்கு, கமுகு, பேய்க்குமட்டி, நிலவேம்பு, கடுகுரோஹணி, கண்டு பாரங்கி, நதம் (தகர்விதை), கொடிவேலி, திப்பிலிமூலம், கோஷ்டம், அதிவிடயம், வட்டத்திருப்பி, வெட்பாலையரிசி, நாககேசரம், கும்மட்டி, நாகணம், லவங்கப்பத்திரி, மிளகு, புரசு அல்லது வல்லாரை அல்லது ஆரைக்கீரை, வகைக்கு ¼ - பலம் வீதம் இடித்துப் பொடிசெய்து, 1-துரோணஜலத்தில் போட்டு காலிலொன்றாய்க்காய்ச்சி வடிகட்டின கஷாயத்தில் பாதியளவு தேன் கூட்டி, பழகின நெய்ப்பாண்டத்திலிட்டு, ஒருபக்ஷம் கழித்து வடிகட்டி, 1-பலம் வீதம் உபயோகிக்க,—வாத பித்த கபங்கள், * பிரமேகம், அஷ்டவிதப்பாண்டு, க்ரஹணி, அருசி, சர்மரோகம், குஷ்டம் முதலிய ரோகங்கள் குணமாகும்.

இதனையே மத்வாரிஷ்டம் என்னும் நாமத்துடன் சிலநூல்களில் கூறியுள்ளார்.

## லோஹாஸவம்.

அரப்பொடி, திரிகடுகு, திரிபலை, ஓமம், வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, சித்ரமூலவேர்ப்பட்டை, வகைக்குப்பலம்-4, காட்டாத்திமலர் பலம்-20 இவைகளைச்சூரணித்து, 2 துரோண ஜலத்திலிட்டு, அத்துடன் தேன் பலம்-64, வெல்லம் பலம்-100 கூட்டி நெய்ப்பாண்டத்திலிட்டு மூடி, 1 - மாதம் வைத்திருக்க ஆஸவமாகும். இதை உட்கொள்ள—தீபனமுண்டாகும். பாண்டு, வீக்கம், குன்மம், உதிரரோகம், மூலம், குஷ்டம், ப்லீஹம் சொறி, காஸம், ஸ்வாஸம், பகந்தரம், அரோசிகம், க்ரஹணி, மார்புநோய், முதலிய நோய்கள் ஓடிவிட்டோடும்.

## வஜ்ஜிரகாஞ்சிகம்.

காடி ½ - ப்ரஸ்தம், திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சுண்டி, குரோசாணி ஓமம், சீரகத்துவயம், இருமஞ்சள், சௌ



வர்ச்சலவணம், பிடாலவணம் இவைகளின்பொடி வகைக்கு வராகனெடை 1, ஜலம் 1 - ப்ரஸ்தம்கூட்டி, ஜலம் சுண்டுகிற பரியந்தம் காய்ச்சிவடிகட்டி உபயோகிக்க—தீபன ஜீரணசக்திகளையும், பாலில்லாத ஸ்திரீகளுக்குப் பால் சுரத்தல், பலம் இவைகளையும் விர்த்திசெய்வதுடன், கெர்ப்பக் கோளாறுகளையும் கபத்தையும் நாசஞ்செய்யும்.

## ஸர்க்கராஸவம்.

சிறுகாஞ்சொறி பலம் - 16 கொடிவேலி, ஆடாதோடை, வட்டத்திருப்பி, சுக்கு, கடுக்காய், நெல்லிக்காய் இவை வகைக்குப் பலம் 2 இடித்து, 1 - துரோணஜலத்தில் போட்டு காய்ச்சி நாலிலொன்றாய்சுண்டவைத்து வடிகட்டி, சர்க்கரை 100 - பலம் தேன் 25 - பலம் சேர்த்து க்ருதபாண்டத்திலிட்டு திப்பிலி, செவியம், ப்ரியங்கு இவைகளின் தூள் ஒவ்வொர்பலம் போட்டுக்கலக்கிமூடிச் சீலைசெய்து பக்ஷம்வைத்திருந்து பின்வடிகட்டி யுபயோகிக்க—மூலம், க்ரஹணி உதாவர்த்தம், அரோசகம், பாண்டு, ஹிருத்ரோகம், மலமூத்திரப் பீடை இவைகள் குணமாகும்.

## ஸாரிபாஸவம்.

நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, லோத்திரப்பட்டை, ஆலம் பட்டை, சிறுகாஞ்சொறிவேர், பூலாக்கிழங்கு, திப்பிலி, வெட்டிவேர், தாமரைகேசரம், வட்டத்திருப்பி, நெல்லிமுள்ளி, சீந்திற்கொடி, விலாமிச்சம்வேர், சந்தனத்துவயம், ஓமத்துவயம், ஏலத்துவயம், கடுகுரோஹணி, லவங்கப்பத்திரி, கோஷ்டம், கடுக்காய், ஊமத்தனிலை வகைக்குப் பலம் 4, இடித்துப் பொடித்துப் பழகியமட்பாண்டத்திலிட்டு 8 - படி, ஜலம்விட்டு 300- பலம் வெல்லம், 60 - பலம் திராக்ஷை, 10 - பலம் காட்டாத்திப்பூ பொடிசெய்துகூட்டி மேல்மூடிச் சீலைமண்செய்து 1 - மாதம் கழித்தெடுத்து வடிகட்டியுட்கொள்ள—மேகம், பகந்தரம், உபதம்சம், வாதரக்தம் தீரும்.

## ஸ்ரீகண்டாஸவம்.

வெண்சந்தனம், மிளகு, ஜடாமாஞ்சி, ஹரித்ராத்வயம், சித்ரமூலம், முத்தம், விலாமிச்சு, கிரந்திதகரம், செஞ்சந்தனம், சிறுநாகமலர், வட்டத்திருப்பி, அரிசித்திப்பிலி, நெல்லிமுள்ளி, செவ்வியம், லவங்கம், ஏலவாலுகம், ஞாழல், ஏலம் இவைகள் வகைக்கு ¼ - தோலா, திராக்ஷப்பழம் 60 - பலம் மசிய இடித்து பாண்டத்திலிட்டு 2 - துரோணஜலம்விட்டு 300 - பலம் வெல்லத்தைக்கரைத்து, 12 - பலம் காட்டாத்திப்பூவைப் பொடித்துத்தூவி மேல்மூடிச் சீலமண்செய்து 1 - மாதம் வைத்திருந்த பின் வடிகட்டியுட்கொள்ள—மதுபானத்தாலுண்டாகும் பற்பல கெடுதிகளையும், அஜீரணம், தாகம் முதலியவைகளையும் நீக்கும்.

## ஹரீதக்யாஸவம்.

கடுக்காய்த்தோல் பலம் 25, தசமூலம் பலம் 50, நெல்லிமுள்ளி பலம் 100, தாமரைக்கிழங்கு பலம் 25, சித்ரமூலம் பலம் 25, சீந்திற்கொடி பலம் 20, சிறுகாஞ்சொறி பலம் 12½ - கருங்காலி பலம் 8, தும்மட்டி பலம் 5, மாதளை பலம் 4, மஞ்சிஷ்டி, அதிமதுரம், கோஷ்டம், விளாம்பழம், தேவதாரு, வாய்விளங்கம், செவ்வியம் லோத்திரம், கண்டுபாரங்கி, ஏலவாலுகம், திப்பிலி; பூலாக்கிழங்கு, ப்ரியங்கு, நன்னாரி, ஜடாமாஞ்சி, சிறுநாகப்பூ, ரேணுகம், சிவதை, மஞ்சள், அரத்தை, மேஷசிருங்கி, சாட்டறணை, சதாவரி, கடுகுரோஹணி, தந்திமூலம் வகைக்குப் பலம் 1, திராக்ஷை பலம் 60, இவைகளை நன்றாய் மசியும்படியிடித்து 8 - துரோணஜலம் விட்டு 2 - துரோணமாக வடிகட்டி சமன்தேன்கூட்டி மிளகு, ஜடாமாஞ்சி இவைகளாற் புகையூட்டிய க்ருதபாண்டத்திலிட்டு காட்டாத்திப்பூ 32 - பலம், திப்பிலி, ஜாதிக்காய், லவங்கம், சாதுர்ஜாதம், வகைக்கு பலம் 2, சுத்திசெய்தவாளம் பலம் ¼, பொடித்துத்தூவிக்கலக்கி மேல்மூடிச் சீலைசெய்து ஒருபக்ஷம் வைத்தெடுத்து வடிகட்டி பிறகு தேற்றான்விதையை மெழுகுத்தூக்கலந்து நன்றாய்த்தெளிய வைத்துக் கொள்ளவும். தாதுக்ஷயம் பஞ்சகாஸம், மூலம், குன்மம் பிரமேகம், பாண்டு, அருசி, வாதரோகம், குஷ்டம், ருஜை, சுவாசம், பகந்தரம், கிருச்ரம், அஸ்மரி, மதுமேகம் தீரும். தேகம் புஷ்டியாகும். பலம், தேஜஸ், வீர்யம், காமம் விர்த்தியாகும். மலடிகட்கு புத்திரசந்தானம் உண்டாகும்.

அங்கோலம் - அழிஞ்சில்.

அசனாதிகணம்-வேங்கை, தினிசம், பூர்ஜம், மருது, பெருமருது, புங்கு, கருங்காலி, வெண்கருங்காலி, காட்டுவாகை, சிம்சபா, ஆடு தீண்டாப்பாளை, வெண்சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்சள், பனை, புரசு, அகில், முருங்கை, ஆச்சா, கமுகு, வெட்பாலை, தேக்கு, வெண்குங்குலியம், தவம், இவைகள் அசனாதிகணம் எனப்படும்.

அசோகம் - ஓர்விருக்ஷம்.

அபயா - கடுக்காய்.

அபஸ்மாரம் - வலிப்பு.

அமிர்தா - சீந்தில்.

அரத்தை - சிற்றரத்தை.

அரவிந்தம் - தாமரை.

அரிசனத்துவயம் - மஞ்சள், மரமஞ்சள்.

அர்ஜுனவிருக்ஷம் - மருதமரம்.

அற்புதரோகம் - புரைக்குழல்.

அஷ்டீலா - நாபியின்கீழ் வாயுவால் ஏற்படும் உருண்டை வடிவான கட்டி.

அஸ்மரி - கல்லடைப்பு.

அஸ்வகந்தி- அமுக்கிராக்கிழங்கு

அஹிபேனம் - அபின்.

ஆடகம் - நான்கு பிரஸ்தம், 8 - சேர் அதாவது 64-பலம் கொண்ட அளவு.

ஆமம் - ஜீரணமாகாத அன்னரஸம்.

ஆமவாதம் - கீல்வாய்வு.

இருநன்னாரி - நன்னாரியும் மாகாளி என்னும் பெருநன்னாரியும் சேர்ந்தது.

இருமஞ்சள்- மஞ்சள்மரமஞ்சள்.

உதரரோகம் - மகோதரமுதலிய வயிற்றைப்பற்றிய நோய்.

உதாவர்த்தம் - இயற்கையால் கீழ்நோக்கிச் செல்லும் குடலின் அசைவானது மேல்நோக்கிச்செல்லல். இது, 14-வேகங்களை அடக்குவதால் உண்டாகும்.

உபதம்சம் - லிங்கப் புற்று.

உரக்ஷதம் - சுவாசாசயத்தினை நாசப்படுத்தும் புண்; இது பெரும்பாலும் க்ஷயத்தை ஒத்திருக்கும்.

உன்மாதம் - பயித்தியம்.

உசீரம் - விலாமிச்சம்வேர்.

ஊருஸ்தம்பம்-தொடையில் வேதனையையுண்டாக்கும் வாதம்.

ஏரண்டம் - ஆமணக்கு.

ஏலத்துவயம் - ஏலக்காய், மலையேலக்காய்: இதுவே சிற்றேலம், பேரேலம்.

ஏலவாலுகம் - ஓர் வாசனைத்திரவியம். இது மலையாளப்பிரதேசங்களில் கிடைக்கும், இதற்குப்பதில் சாக்கு பூனாக்கிழங்கென ஜாற்கள் கூறும். இதனை மனிவெண்பாவில் பேவதாருகல்பம் என்னு மதிகாரத்தில் காண்க. சிலர் ஏலம், வாலுகம் என இரண்டாகப்பிரித்து ஏலத்தையும் வெட்டிவேரையும் சேர்க்கின்றனர். பேரேலம் என்றும் வால்மிளகு என்றும் பலவாறுக அகராதிகளில் வரையப்பட்டுள்ளன. முசுமுசுக்கைக்கும்பெயர்.

ஓமத்துவயம் - ஓமம், குரோசாணி ஓமம்.

கண்டுபாரங்கி - சிறுதேக்கு.

கதிரம் - கருங்காலி.

கமுகு - பாக்கு.

கருமத்தை - கருவூமத்தை.

களாமயம் - கண்டமாலை அல்லது கழுத்தில் உண்டாகும் ஓர் பிணி.

கர்ஜூரம் - பேரீச்சங்காய்.

கனகம் - ஊமத்தை அல்லது நெல்லிக்காய்.

கனம் - கோரைக்கிழங்கு.

காகோலி - இது வடமொழி வைத்தியகிரந்தங்களுள் கூறியுள்ள பழக்கத்திலில்லாத மூலிகைகளில் ஒன்று. இதற்குப்பதில் அஸ்வகந்தி என்று கூறுவர்.

காஸ்மரி - குமிழ்.

கிராதம் - நிலவேம்பு.

கிரீச்ரம்-நீர் அருகலும்சுருக்கும்.

கிரீஷ்மருது - ஆனி ஆடிமாதம்.

கிருமிக்னம் - வாய்விளங்கம்.

கிருமிநாசனி - வாய்விளங்கம்.

கிலாஸம் - இது மாம்சத்தைக் கவர்ந்து கொண்டிருக்கும் 7-சர்மங்களில் ஒன்று. வெண்குஷ்டம் உண்டாவதற்கு இடம் இதுவே: ஆகையால், கிலாஸம் என்பது குஷ்டம் எனப்படும்.

குக்கில் - மைசாக்ஷி (ஓர்வகைப் பிசின்)

குடவம்-4-பலம், அல்லது ½-சேர்

குடஜம் - வெட்பாலை.

குதரோகம் - ஆசனத்தைப் பற்றிய நோய்.

குப்ஜகம் - நாயுருவி.

குமரி - கத்தாழை.

கேசரம் - நாககேசரம் குங்கும கேசரம்.

க்ருதம் - நெய்.

சந்தனத்வயம் - வெண்சந்தனம், செஞ்சந்தனம்.

சதாவரி - தண்ணீர்விட்டான் கிழங்கு.

சன்னராஷ்டம் - சிற்றரத்தை

சாட்டறணை - வெள்ளைச்சார் வேளை.

சாதுர்ஜாதம்-இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி, ஏலம், சிறுநாகப்பூ இவை நான்கும் கூடியது.

சிசிருது - மாசி பங்குனிமாதம்.

சித்ரமூலம் - கொடிவேலிவேர்.

சுண்டி - சுக்கு.

சௌவர்ச்சலவணம் - செந்தி வெடியுப்பு. இது கெந்தக வாசனையுள்ள ஓர்வகை உப்பு.

சைந்தவம் - இந்துப்பு.

ஸ்வேதாக்யம்சோதக்னம்-வெண் சாட்டறணை.

தக்ரம் - மோர்.

தசமூலம் - லகுபஞ்சமூலமும் மஹாபஞ்சமூலமும் சேர்ந்தது தசமூலமென்க. அவையாவன,—கண்டங்கத்திரி, ஆற்றுமுள்ளி, சிற்றுமல்லி, பேராமல்லி, நெருஞ்சி, வில்வம், பாதிரி, வாகை, முன்னை, தழுதாழை இப்பத்தும் தசமூலமாம்.

ததிமஸ்து - தயிர்ஜலம், அதாவது தயிரின் தெளிவுநீர்.

தந்தி - ஓர் விருக்ஷம்; இதற்கு பேதியாகிற குணமுண்டு. சிலர் இதனை நேர்வாளமெனக் கூறுவர். தந்திக்கும் வாளத்திற்கும் பேதமுண்டு.

தாதகி - காட்டாத்தி

தாத்ரீ - நெல்லிக்காய்

தான்யகம் - கொத்துமல்லி.

திப்பிலித்வயம்- அரிசித்திப்பிலி ஆனைத்திப்பிலி

திரிகடுகு - சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி.

திரிபலா - கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய்.

திரிஜாதம - லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஏலம்.

தூராலபா - சிறுகாஞ்சொறி

துரோணம் - 4 ஆடகம், அல்லது 32-சேர் அல்லது 256-பலம் கொண்ட ஓர் அளவு.

துலாம் - நூறுபலம்.



தேவகாஞ்சனம - தேவதாரு

த்ராயமாணம் - தாரப்பூண்டு.

நதம் - தகரவிதை.

நன்னாரித்வயம் - இருநன்னாரி,

நாகணம் - நகம் என்னுமோர் ரசனைச் சரக்கு.

நாரிகேளம - இளநீர்.

நிகும்பம் - சிவதை.

நிதிக்திகா - கண்டங்கத்திரி.

நீலோத்பலம் - கருநெய்தல்.

பகந்தரம் - குதத்துவாரத்திற்கு அருகில் உண்டாகும் பிளவை; இதனைப் பவுத்திரமெனத் தமிழிற் கூறுவர்.

பஞ்சகோலம் - சுக்கு, கண்டத்திப்பிலி, அரிசித்திப்பிலி, செவ்வியம், சித்திரமூலம் இவ்வைந்தின் தொகுப்பு.

பஞ்சவாஸம - ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வால்மிளகு, ஏலம், லவங்கம்.

பத்ராங்கம் - லவங்கப்பட்டை.

பப்பூலம் - வேல்.

பரிணாமசூலை - ஜீரணாசயத்தாலுண்டாகும் வயிற்றுவலி.

பலா - சிற்றாமுட்டி.

பாக்சோத்தி-லோத்திரம், இதில் செம்மை, வெண்மை என இருவகை உண்டு.

பாதிர்யம் - செவிட்டுரோகம்.

பார்த்தவிருக்ஷம் - மருதமரம்.

பிடகம் - பிளவை.

பிடலவணம் - விளையுப்பு.

பிப்பலி - திப்பிலி.

பீஜகம் - வெட்பாலையரிசி

புநர்நவம் - வெள்ளைச் சாட்டறணை

புப்புஸம் - நுரையீரல்.

புஷ்கரமூலம் - தாமரைக்கிழங்கு. சிலர் மேட்டுத்தாமரை, நிலத்தாமரை எனவும் கூறுவர்.

ப்ரதரரோகம் - பெரும்பாடு.

ப்ரதிச்யாயம் - சிரசில் வாயு பிரகோபமடைந்து நாசியின் அடியிலுள்ள கபம் பித்தம் இவற்றை மேலுக்கிழுக்கும் ஓர் நாசிரோகம்.

ப்ரத்யஷ்டீலா - குடலில் குழலாக உண்டாயிருக்கும் அஷ்டீலா கட்டி.

ப்ரஸ்தம்-16 பலங்கொண்ட ஓர் அளவு அல்லது 2 சேர்.

ப்ரியங்கு - ஞாழல், பதில் தினையரிசி.

ப்ருங்கராஜம் - கரிசாலை அல்லது கரிசலாங்கண்ணி.

ப்லீஹா - வயிற்றின் இடதுபக்கத்திலுள்ள மண்ணீரலின் வீக்கம்.

மதூரிகா - வெதுரி அல்லது அப்பமை

மஞ்சள்த்வயம் - இருமஞ்சள்,

மண்டலம் - 40 நாள் கொண்டது, சிலர் 48-நாளென்றும்கூறுவர்,

மதூகம் - இலுப்பை.

மரிசம் - மிளகு.

மஸ்து - தெளிந்தஜலம் இதனைத் ததிமஸ்து என்னும் இடத்தில் காண்க.

மிசி - சதகுப்பை.

மித்யாஹாரம் - விருத்தமான ஆகாரம், அதாவது பாலும் தயிரும் ஏககாலத்தில் புசித்தல்.

முஸ்தகம் - கோரைக்கிழங்கு.

முஸ்தம் - கோரைக்கிழங்கு.

முஞ்சீரகம் - சீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம்.

மூடவாதம் - கர்ப்பாசயத்தின் வாயானது வாயுவால் தாக்கப்பட்டு சிசுவை வெளிப்படுத்தாமலிருக்கும் ரோகம்.

மூர்வா - பெருங்குரும்பை இலைப் பாயும் அகலமாயும்நீளமாயுமுள்ள இலையோடுகூடிய ஓர்கொடி.

மேஷஸ்ருங்கி - ஆடுதீண்டாப்பாளை.

ம்ருகமதம் - கஸ்தூரி.

யக்ருத் - வயிற்றின் வலதுபுறத்திலுள்ள கல்லீரலின் வீக்கம்.

ரிஷபகம் - இது, பழக்கத்தில் இல்லாத ஓர்சரக்கு; இதற்குப்பதில் சரக்கு நிலப்பூசனி.

ரேணுகம் - கடுக்காய்வேர், காட்டு மிளகு, வால்மிளகு, ஏலரிசியைப் போல் சிவப்பாயுள்ள ஓர் சரக்கு மென்பர்.

ரோஹிதம் - செம்மரம்.

லக்ஷ்மணமூலம் - நறுந்தாளி.

லோத்ரம் - ஓர் மரப்பட்டை.

லோஹம் - இரும்பு.

வத்ஸகாதிகணம் - வெட்பாலை பெருங்குரும்பை, கண்டுபாங்கி, கடுரோஹிணி, மிளகு, அதிவிடயம், கன்னி, ஏலம், வட்டத்திருப்பி, சீரகம், வாகை, ஓமம், வெண்கடுகு, கருஞ்சீரகம், வசம்பு, காயம், வாய்விடங்கம், ஆடுதீண்டாப்பாளை, பஞ்சகோலம் இவைகளின் கூட்டிற்குப்பெயர்.

வாதரக்தம் - வாத தோஷமும் இரத்தமும் கெட்டு உண்டாகும் ஓர் பிணி; இது பெரும்பாலும் குஷ்டத்தைப்போன்றது.

வாதசோணிதம் - ருதுகாலத்தில் உண்டாகும் சோணிதத்தைப்பற்றிய ஓர் பிணி.

வாஸா - ஆடாதோடை.

விடங்கம் - வாய்விளங்கம்.

வித்ரதிக்கட்டி - விப்புருதியென தென்னாட்டில் வழங்குவர்.

விருஷ்ய - நரம்புகளுக்குவலுவை கொடுக்கக்கூடியவை.

விஷமாக்னி - ஒருசமயம் பசியும் மற்றொருசமயம் பசியில்லாமலு[illegible]

விஷாணி - வாக்ஷிபேதி.

விஸ்போடகம் - கொப்பளம்.

விஸர்ப்பி - அக்கி அல்லது அக்கினியம்மை.

ஷண்டத்வம் - பேடியின்மை.

ஸர்க்கரா - சிறுகற்சொறி.

ஸாரஸ்வதம் வல்லாரை, சிலர் பிரமிய வழுக்கை அல்லது பிரமி எனவுங் கூறுவர்.

ஸாரிபா - நன்னாரி.

ஸிரீஷ - வாகை.

ஹனுஸ்தம்பம் - மோவாய்க்கட்டை பிடிப்பு.

ஹரீதகீ - கடுக்காய்,

ஹரித்ரா - மஞ்சள்.

ஹலீமகம் - காமாலை ரோகபேதம்; வாதபித்த தோஷங்களால் பசி வலிவு உத்சாகம் குறைந்து இரத்தம் க்ஷீணித்து தேகம் மலம் மூத்திரம் சிறிது மஞ்சள் அல்லது பசுமைநிறமுடையதாய் ஜ்வரத்துடன் கூடிய காமாலையென்க.

ஹிங்குபத்திரி - பெருங்காய மரத்தின் இலை.

ஸ்ரீகண்டம் - வெண்சந்தனம்.

க்ஷாரத்வயம் - ஸத்திக்ஷாரம், யவக்ஷாரம்.

க்ஷீரகாகோலி - இதுவும் கிடைப்பதரிது இதற்குப்பதில் சரக்கு அச்வகந்தி. சில தமிழ் அகராதிகளில் காட்டாமணக் கென்று கூறியுள்ளது.

ஜீரகத்வயம் - சீரகம் கருஞ்சீரகம்.

ஜீவகம் - இதுவும் அனுபவத்தில் இல்லாத அஷ்டவர்க்கங்களில் ஒன்று. இதற்குப்பதில்நிலப்பூசனியைச் சேர்த்துவருகின்றனர் சித்தர்களின் நிகண்டில் இதற்கு இலவமபிசின் என்னும் பொருள் கூறியுள்ளது.

சென்னை-600 00

## சொல்வக்குறைதி ஏது?

திருக்குறள் மூலம் (இலேசக்கடிதம் பாக்கெட் சயிஸ்) 0 8

,, மூலமும் பரிமேலழகர் உரையும் (டை சயிஸ்) 2 8

இது, பலர்வேண்டுகோளுக்கிணங்கி முத்துப்போன்ற சிறு எழுத்தில் உயர்ந்ததாளில் அச்சுப்பிழையின்றி சுத்தபாடமாக அச்சிட்டு காலிகோபயிண்டு செய்யப்பெற்றது.

## சந்தப்பொலிவுக்கு ஆதி.

இராமஜெயத்திருப்புகழ் (பால அயோத்தியாகாண்டங்கள் மாத்திரம்.) இது, பழைய ஆசிரியர்களின் நூல். இதுகாறும் வெளிவாராதது. பலரும் இதன் பொருளை அறியும்பொருட்டுத் தெளிவிய [illegible] இலக்கணக்குறிப்புடன் பொழிப்புரை எழுதப்பெற்றது. [illegible] படிக்க இனிய சுவைதரும். இதன் விலை அணா 12

## பத்திக் கவிக்கு எது?

ஸ்ரீசுந்தரமூர்த்தி. (தடுத்தாட்கொள்ளப்பெறல்) விலை அணா 2½

காரைக்காலம்மை என்னும் புனிதவதி 4

ஸ்ரீகிருஷ்ணன் தூது 3

இம்மூன்றும் சிறியோரும் பெரியோரும் களிப்படையும்படியாய் எழுதப்பெற்றவை. ஸ்வாசக்களும் அடங்கிய நாடகரூபம். கல்விமான்களால் ஆமோதிக்கப்பெற்றவை.

## நோயற்றவாழ்வைக் கொடுப்பது எது?

தேரையர் மருத்துப்பாரதசாடகம் என்னும் வைத்திய கர்ம மர்ம நூல், வைத்தியசாரங்களை நவநீதம் (வெண்ணெய்) போல் திரட்டிக் கொடுப்பது இது ஒன்றே. வைத்தியர்களுக்கும், வைத்தியரல்லாதார்கட்கும் மிக்க உபயோகமானது. விலை அணா 10

விஷப்பிரதிவிதி. 4

ப்ரொப்ரைட்டர்

ஈஸ்டர்ன் பார்மசூடிகல் ஒர்க்ஸ்,

37 - ஜீரோட்

[illegible] சென்னை.